உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௪௭.] கர-௵ ஆவணி—ஐப்பசி-மீ [பகுதி. ௧0-௧௨.

Vol. 47. August—November 1951 No. 10-12.

உள்ளுறை.

சிலப்பதிகாரப் பதிகம்:—	பத்திராசிரியர்	௧௪௫—௧௬௨
கம்பர் கவியில் அருஞ்சொற்பிரயோகம்:—	திரு. பண்டித, ஆ. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள்	௧௬௩—௧௭௪
திருப்புல்லாணி நொண்டிநாடகம்:—	பத்திராசிரியர்	25—54
செந்தமிழ் 47-ஆம் தொகுதியின் உள்ளுறை முதலியன:—	௸	1—4

பத்திராசிரியர்—திரு, நா. அப்பனையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1952.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by T. N. APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54 Tamil Sangam Road, Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

S. சிவஸ்வாமி,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-சஎ.] கர-ஹு ஆவணி—ஐப்பசி-மீ [பகுதி. க0-கஉ.

Vol. 47. August—November 1951 No. 10-12.

ஸ்ரீ:

சிலப்பதிகாரப் பதிகம்.

[T. N. அப்பனையங்கார். ஆசிரியர், தமிழ்ச்சங்கம், மதுரை.]

சிலப்பதிகாரப் பதிகத்தின் சிறப்பியல்புகள் மிகப்பல. ஏனைச் சிந்தாமணி மணிமேகலைப் பதிகங்கள் அங்ஙனமாகா. அஃதெவ்வா றெனிற் கூறுவேன்.

பதிகமென்பது பாயிரம். அஃது 'ஆக்கியோன் பெயர்' முதற் பதினோருறுப்புடையது. இப் பதினோருறுப்பும் பெரும்பான்மை இலக்கண நூல்களிலன்றி இலக்கிய நூற்பாயிரங்களிற்பயிலவழங்கா. மற்று அந்நூற்பாயிரங்களெல்லாம் சிலவும்பலவுமாய உறுப்புக்கள் குறைந்துவருதலே வழக்காறாக வுடையன.

அம்முறையிற் சிந்தாமணிப்பதிகம் 'நுதலியபொருள்' ஆகிய கதைச்சுருக்கம் ஒன்றேகூறி அமைகின்றது. மற்று மணிமேகலைப் பதிகமோ எனில், 'கதைபொதிபாட்டு' என அந் நுதலியபொரு ளோடு, 'ஆக்கியோன்பெயர்' 'நூற்பெயர்' 'கேட்போர்' ஆகிய உறுப்புக்களைமட்டும் விசேடமாகப்பெற்று நின்றுவிடுகிறது. இவ் வாறன்றிச் சிலப்பகாரப்பதிகம், பாயிரவிலக்கணம் பதினோருறுப் பும் ஒன்றொழியாமல் தன்னகத்தேகொண்டு தனிச்சிறப்புற்று விளங்குவது இங்கே பாராட்டற்குரியது.

இன்னும் பாயிரவுறுப்புப் பதினொன்றேயன்றிப் பிறபலகுறிப்புக்களும் நூலுணர்ச்சி வாய்ப்புறப்பெறுதற்கு நூன்முகத்து வேண்டப்படுவன வுள. அக் குறிப்புகளையெல்லாம் 'வாய்ப்பக் காட்டல் பாயிரத்தியல்பே' என இலக்கணம் இலேசினாற் றழுவிக் கொண்டதாக உரைப்பர். அங்ஙனம் கொள்ளக்கிடந்த குறிப்புகளும் சிலப்பதிகாரப் பதிகத்து மிகப்பல வாய்ப்புறக் காணலாகும்.

'ஆடிநன்னிழலில் நீடிருங்குன்றம் காட்டுவார்போன்று கருத்து வெளிப்படுத்து' எனச் சிலப்பதிகாரக் காப்பியத்தின் சிறப்பியல்பு போற்றப்பட்டது. அதன் அணிந்துரையாய பதிகமும் அவ்வாறே அக் காப்பியநலன்களைக் கவினுறக்காட்டும் கண்ணாடியாய்த்திகழ்வது அருமையுடைத்தன்றே? சுருங்கச்சொல்லின் தமிழ்மொழிக் கண்ணுள்ள இலக்கணவிலக்கிய நூற்பாயிரப் பரப்பினுளெல்லாம், சிலப்பதிகாரப்பதிகம் தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் உரையாணி யென்றல் மிகையாகாது.

இனி அச்சிறப்பியல்புகள் விதந்து விவரிக்கத் தக்கன. அவற்றுள் முதன்முதலாகச் சிறப்புப்பாயிரவுறுப்புப் பதினொன்றனையும் அதனுள் வெளிப்படக்காணுமாறு விளக்குவேன்.

பதிகத்துக்கண் 'இளங்கோவடிகட்கு' எனவும் 'அடிகளருள' எனவும் 'ஆக்கியோன்பெயர்' கூறப்பட்டது.

குன்றக்குறவர் தண்டமிழ்ச்சாத்தனார் இருவர் வாயிலாகவும் வந்த கண்ணகிவரலாறு கூறினமையால் 'வழி' பெறப்பட்டது.

என்னை? இன்னநூலின் வழித்தாய் இதுவந்ததுஎன நூல்வழி கூறுதலே மரபாகலின், இங்குக் குறவர்-சாத்தனார் வரலாறுகளை வழியெனக் கொள்ளல் பொருந்தாது எனின்; அதற்குவிடை வருமாறு:—

ஆக்கியோன்பெயர் முதலாயினபோல வழிஎன்பதும் எல்லா நூலுக்கும் ஏற்பதாகிய ஒரு சிறப்புப்பாயிரவுறுப்பு. எனவே வழி நூல்களுக்கு மட்டுமன்றி முதனூல்களுக்கும் யாதானுமொரு வரலாற்றுவழி கொள்ளத்தகும். அங்ஙனமன்றி நூல்வழியொன்றே

கொள்ளவேண்டுமெனின், அது வழிநூலுக்குமட்டுமே அமைந்த வுறுப்பாகி, முதல்வழிசார்பென மூவகைப்பட்ட நூல்களுக்கும் பொதுவிலக்கணமாக வகுத்த சிறப்புப்பாயிர வுறுப்பென்று கொள்ள இயலாமல் வழுப்படும்.

அன்றியும் தமிழ்மொழிக்கு முதனூல்வகுத்த ஆசிரியர் அகத்தியனார்தாமே திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளின் அருள்வழிப் பட்டு அதுசெய்தார் என்ப. அப்பொழுது அம் முதனூலுக்கும் அக்கடவுள் அருள்வழியே 'வழி'யென்ற சிறப்புப்பாயிர வுறுப்பாகக் கொள்ளல் அமையும். உபதேசபரம்பரையா யுணர்த்தப்படும் ஞானநூல்கள் சிலவற்றிற்கு அவ் வரலாற்றுமுறைதானே வழியாகக் கொள்ளத்தக்கது.

இவையேயன்றி, இறையனார்களவியல்உரை வாய்மொழியாக வந்த வரலாறுகூறுமிடத்து, களவியற்பொருள்கண்ட கணக்காயனார்மகனார் நீரக்கொற்றனார்க் குரைப்ப, அவர் தேனூர்கிழார்க் குரைப்ப, அவர்முதலாக முசிறியாசிரியர் நீலகண்டனார்காறும் நடந்துவருகின்ற துரை என மரபுவழி கூறப்பட்டது. இதனையும் சிறப்புப்பாயிரவுறுப்பான 'வழி'யின்வகையில் ஒன்றாகக் கொள்ளல் வேண்டும். அல்லாக்கால் அவ்வுரையாளர் கூற்று என்ன பயனுடைத்தாம்? என்பது.

எனவே இதுகாறுங்கூறியவற்றால், நூனுதல்பொருள்கள் ஆக்கியோனறிவிற்கு எட்டியவாயில்கள் யாவையேயாயினும் அவை'வழி' யெனத்தகும் என்பது முடிந்தது. இதனால் வழிநூலொன்றற்கே யுரிய முதனூல்வழி கூறுதலே சிறப்புப்பாயிரவுறுப்பாகிய 'வழி' யின் இலக்கணம் என்பார்கூற்று மறுக்கப்பட்டது. நிற்க.

இச் சிலப்பதிகாரப்பதிகத்தில் 'முடிகெழுவேந்தர் மூவர்க்குமுரியது' என்று கூறிய குறிப்பால் இந்நூல்வழங்கும் நிலமாகிய 'எல்லை' பெறப்பட்டது.

என்னை? 'குணகடல் குமரி குடகம் வேங்கடம்' என்றாற்போல நிலவெல்லைகூறாது இங்ஙனங்கூறியது பொருந்துமோ? எனில்; பொருந்தும். 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின், நாற்பெய

ரெல்லை' யகத்தும் இந்நூல் உரிமையாய் வழங்குமென அதனாற் பெறப்படுவதாம். ஆகவே இதுவும் ஓராற்றால் எல்லையுரைத்ததே என்பது.

இனி, இங்ஙனம் குறிப்பாற்கொள்ளவைத்ததிற் பொருட்சிறப்பு மிகுதியும் உண்டு. மூவேந்தர்க்கும் உரிமைகூறிய துணையே அவர்நிலத்து மக்களனைவர்க்கும் அஃது ஒத்த உரிமையுடைத்தென்பது சொல்லாமையே அமைந்தது. அமையவே, செந்தமிழ் நிலத்து வேந்தருங்குடிகளுமாய மாந்தரனைவரும் பொதுவுடைமையாகப் போற்றுந்தரத்தது சிலப்பதிகாரமெனத் தெளிவாயிற்று.

இவ்வாறே பிறசான்றோரும், தமிழர்பொதுமறையாகிய திருக்குறளின் சிறப்புக்கருதி,

'மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியும்
மும்முரசு முத்தமிழு முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்'

எனக்கூறியது காண்க. இங்கே பதிகத்து 'முடிகெழுவேந்தர்' என்ற சொற்குறிப்பால், சிலப்பதிகாரமும் திருக்குறளேபோல் அவர் தடமுடிமேற்றாராய்த் தலைக்கணியாக விளங்குவது பெறப்படும்.

அன்றியும் சிந்தாமணி சூளாமணி பெருங்கதை என்பவற்றைப் போலாது, சிலப்பதிகாரக் கதைநிகழ்ச்சி முழுவதும் தமிழ்நாடொன்றற்கேயுரிய தனிச்சிறப்பு வாய்ந்தது. இப்பொருள்நயமும் 'மூவர்க்குமுரியது' என்ற முற்றும்மையின் குறிப்பால் தெற்றென விளங்கும். எனவே இங்ஙனம் எல்லைகூறிப் போந்ததற்கு இதுவும் ஓர் பயனும் என்பது. இது நிற்க.

இப்பதிகத்து, 'சிலப்பதிகார மென்னும் பெயரால் நாட்டுதும்' எனவே 'நூற்பெயர்' என்னும் பாயிரவுறுப்புக்கூறப்பட்டதாயிற்று.

இனி 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்றதனால் 'யாப்பு' என்னும் பாயிரவுறுப்புப் பெறப்படுமென்க.

என்னை? யாப்பென்ற சொற்கு 'இன்னநூ லாராய்ந்தபின்னர் இதுகேட்கற்பாற்று' என்னும் 'இயைபு' எனவும் தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு என்னும் நால்வகைப்பட்ட 'நூல்யாப்பு' எனவும் பிறரெல்லாம் உரைத்தாரால் எனின்; அற்றன்று.

இதுகேட்ட பின்னர் இதுகேட்க என்னும் 'இயைபு' கொள்வோன்தன்மை கூறும் பொதுப்பாயிரத்தால் ஒருவாறு கொள்ளப்படும். சிறப்புப்பாயிரத்தில் அதனைக்கொள்வது அத்துணைச் சிறப்பிலது. ஏனெனில் யாதொரு நூன்முகத்தும் அவ் 'இயைபு' வெளிப்படையாகக் கொள்ளக்கிடப்பதின்று. ஆகையால் இவ் 'இயைபு' கூறுதல் பாயிரஇலக்கணமெனக் கொள்ளின் அவ்இலக்கணம் இலக்கியமிலதாய் ஒழியும்.

இனி, தொகுத்தல் முதலிய 'நூல்யாப்பு' எனின் அவை வழிநூல்வகை ஒன்றற்கே பொருந்தும். முதல்வழிசார்பென மூவகை நூற்கும் அவ்வுறுப்பினைக்கொள்ளல் அமைவுடைத்தன்று. ஆகவே எல்லாநூற்கும் ஏற்புடையதாகச் சிறப்புப்பாயிரங் குறித்த யாப்புறுப்பு, வழிநூல்வகையான 'நூல்யாப்பின்' வேறுதல் வெளிப்படை. இது நிற்க.

'இவ்வகைக் காப்பியநடையானியன்றது இந்நூல்' என, அஃது யாக்கப்பட்டுள்ள முறையினையுணர்த்தலும் சிறப்புப்பாயிரத்திற் சாலப் பயன்தருவதொன்றும். ஆகவே 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனச் சிலப்பதிகாரப் பதிகங்குறித்த காப்பிய யாப்பும் ஒருவகை யாப்புறுப்பெனக் கோடல் இழுக்கின்றென்பது.

என்னை? இக் காப்பியயாப்பினை 'யாப்பு'எனக்கொள்ளின் ஒருசார் இலக்கியங்கட்கன்றி ஏனை இலக்கணநூல்கள் எல்லாவற்றிற்கும் அவ்யாப்புப் பொதுமையிற்பொருந்துமா றில்லையே என்னில்; அந்நூல்களுக்கும் அவ்விலக்கணத்தை ஏற்றபெற்றி இயைத்துக் கொள்ள அமையும் என்க.

'மஹாபிண்டம்' 'பிண்டம்'எனச் சொல்லப்படும் இலக்கண நூல்வகைகளாலும் இவ்யாப்புமுறை ஒருவாறு கொள்ளலாகும்.

தொல்காப்பியத்தைப் பிண்டமெனவும் அகத்தியத்தினை மஹா பிண்டமெனவும் வழங்குவதுண்டு 'மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானும்' எனவரும் மேற்கோள் காண்க.

இன்னும் இவ்வாறே, 'யாப்பு' என்ற பொதுச்சொல்லான் வெண்பா முதலிய 'செய்யுள்யாப்'பெனக் கோடலும் இழுக்காதெனக்கருதி, நூற்பாயிரங்களில் அவ்வகை யாப்புறுத்திச்சென்ற ஆசிரியரும் மிகப்பலர். 'மூன்றுறை மன்னவ னுன்கடியுஞ் செய்தமைத்த, இன்றுறை வெண்பா இவை' 'ஆசிரியப் பாவதனு லருமறைநூல் விரித்தானே' 'நனியார்வேம், பொங்குக்லி யின்பப் பொருள்' 'செகத்தினில் விருத்தப்பாவாற் செய்கெனச் செய்ததன்றே' என்பன முதலிய இதற்குச் சான்று.

பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், நாலடியார், வெண்பா மாலை, ஆசிரியமாலை, பாரதவெண்பா, யாப்பருங்கலக்காரிகை என்றித்தொடக்கத்தன வெல்லாம் தத்தம் யாப்பின் சுவையமைபற்றியே அவ்வாறு பெயர்பெற்றன. ஆகையால் இந்நூல்இன்னவகைச் செய்யுள்யாப்பா னியன்றதென்பதைப் பாயிரத்துணர்த்தலும் அந்நூலைப் பயப்பித்தற்கு ஏதுவாதல் ஒருதலை. 'வெண்பா இருகாலிற் கல்லானை' என அதன் கற்றற்கெளிமை நோக்கி மாணுக்கர்க்கு முன்னுற அதன்கண் ஊக்கஞ்செல்லு மென்பது வெளிப்படை. பிறவும் அன்ன. விரிக்கிற் பெருகும்.

இனி அந்தாதி, கலம்பகம், கோவை, உலா, மடல் பரணி, பிள்ளைத்தமிழ் என்பனவாதிய 'பிரபந்தயாப்பும்' ஓராற்றான் இவ்வகை யாப்பின்கண் அடங்குவனவே. அல்லாக்கால், 'அவாவற்று வீடுபெற்ற சடகோப னலற்றியசொல், அவ்வாவில் அந்தாதி யாயிரம்' என்பதுபோன்ற பாயிரக்கூற்றான சான்றோரிலக்கியங்கட்கு இலக்கண மின்றாய் ஒழியும். இது நிற்க.

சிலப்பதிகாரப்பதிகத்து 'அரைசியல் பிழைத்தோர்க் கறங் கூற் றாவதூஉம்' என்றற்றொடக்கத்து மூவகை உள்ளுறைகளால் முதலியபொருள் உரைக்கப்பட்டது.

மற்றும் 'மதுரைக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்' எனக் 'கேட்போர்' என்னும் பாயிரவுறுப்புக் கிளக்கப்பட்டதாம்.

அஃதாக, கேட்போர் என்றது பாடங்கேட்கும் மாணுக்கரை என்பவால் எனின்; அதுபொருந்தாது. என்னை? உரையாசிரியருள்ளிட்ட சான்ருேருரையுடன் அது மாறுகொளக்கூறலாம். ஈண்டுச் 'சாத்தன் கேட்டனன்' என்ருற்போலவே 'இளங்கோவேந்தன் அருளிக் கேட்ப' எனவும் 'அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து' எனவும் பிறுண்டுப் பாயிரங்களிற் பயின்றுவரும் இலக்கியங்கள் இலக்கணமின்றியொழியும். களவியலுரையினைக் குமாரக்கடவுள் கேட்டுக் குற்றமின்மை யாராய்ந்தார் என்பதும் பயனில் கூற்ரும்.

அன்றியும் மாணுக்கரியல்பு பொதுப்பாயிரத்துப் பெறப்படுவதன்றிச் சிறப்புப்பாயிர வுறுப்பாதலின்று. இன்ன நூல் கேட்டற்குரியர் இன்ன மாணுக்கர் என்னும் சிறப்புவகை ஈண்டே கொள்ளக்கிடக்குமெனின், அவ்வாறே ஆசிரியற்கும் சிறப்பியல்புகூருமை குன்றக்கூறலாய் வழுவும். மற்று, நூல் அரங்கேறும் அவைக்களத்துக் கேட்டாரைப் பாயிரத்துணர்த்துதல் நூலைப்பயப்பித்தற்கு ஏதுவாமென்பதும் ஒருதலை. ஆகலின் கேட்போர் என்றது மாணுக்கரல்லாமை தெற்றென விளங்கும்.

அங்ஙனமாயின் 'ஆக்கியோன்பெயர்' என இறந்தகாலத்தாற் கூறினுற்போல இதனையும் 'கேட்டோர்' என இறந்தகாலத்தாற் கூருததென்னை? என்பது கடா. இதற்கு விடை வருமாறு: 'உற்ருன்நோய் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென், றப்பானுற் கூற்றே மருந்து' என்ற திருக்குறளில் 'உற்ருன்' என இறந்தகாலத்தாற் கூறியதற்கேற்ப, 'நோய்தீர்த்தான்' என்னுது தீர்ப்பான் என எதிர்காலத்தாற் கூறியது குற்றமாகாதவாறுபோல இதுவும் குற்றமாகாதென்பதாம்.

இனி 'பால்வகைதெரிந்த பதிகத்தின்மாபெண்' என்றதனுல் காப்பியங்கற்றலின் பயனுணர்த்தப்பட்டது என்பர். 'அறப்பால், பொருட்பால், காமத்துப்பாலாகிய அப் பால்களின் வகையைத்

தெரிந்த செய்யுளின் பதிகம்' என ஆசிரியர் அடியார்க்குநல்லார் உரைகூறிப் போந்தது அறிக.

இன்னும் காலம் களம் காரணம் என்ற பாயிரவுறுப்பு மூன் றனையும் இப்பதிகத்துக் காணுமாறு கூறுவேன். 'குடக்கோச் சேரல்' என்றதனால் அச்சேரலாகிய செங்குட்டுவனது காலம் என் பதும், 'அவனுழையிருந்த தண்டமிழ்ச்சாத்தன்' என்றதனால் அச் சாத்தனாரோடுகூடிய அச்சேரனது அவைக்களம் என்பதும் குறிப் பாற் கொள்ளப்படும். 'அடிகள் நீரேயருளுக' எனச் சாத்தனார் வேண்டிக்கொண்டமை கூறியதனாற் காரணமும் பெறப்பட்டது.

• இதுகாறும் பாயிரவுறுப்புப் பதினொன்றும் ஒன்றொழியாமற் சிலப்பதிகாரப்பதிகத்துப் புலப்படக்காணலாயின. இனிக் காப் பியச்சுவை நுகர்ச்சிக் குறுப்பான மிகநுண்ணிய கருத்துக்கள் பிற வும் பதிகத்துப் பொதிந்துள்ளவை இயன்றவளவுஎடுத்துக்காட்டப் பெறும்.

ஆக்கியோன்பெயரோடு அவன் பெருமைகூறலும் பாயிரத்து வேண்டற்பாலது. 'குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த குடக்கோச்சேர லிளங்கோ வடிகள்' என்றதனால் அவர் அரும் பெரும் துறவின் ஆற்றல் விளங்கும். 'உரைசாலடிகள்' என்றத னால் அவர் துறவின்பெருமையோடு புலமையாலும் புகழெய் தினமை போதரும். 'அடிகளருளச் சாத்தன் கேட்டனன்' என்ற பன்மையொருமை வேறுபாட்டுக் குறிப்பால் சங்கப்புலவர் சாத்த னாரினும் இளங்கோவடிகளின் சால்புடைமை இனிதுபெறப்படும். எனவே முத்தமிழ்ப்புலமையும் வித்தகக்கவிதையும் ஒருங்கு வாய்ந் துயர்ந்து விருப்புவெறுப்பற்ற சோமுனியாகிய இளங்கோ வடிகள் இத் தொடர்நிலைச்செய்யு ளியற்ற மிகவும் ஏற்புடையரென் பது தெற்றென விளங்கிற்று.

இனி, 'எல்லை'யென்னும் பாயிரவுறுப்பு, நூல்வழங்கும் நில வெல்லை கூறுவதன்றி, நூலுறுப்புக்களின் தொகை 'அளவு' கூறுவ தெனக் கொள்வாருமுளர். அவர்கொள்கையொடும் பொருந்த 'இவ் வாறைந்தும் உரையிடையிட்ட பாட்டு' எனப் பாட்டுக்களின் எண் அளவும் கூறப்பட்டதாம்.

இன்னும் நூற்பெயருடனே நூற்பெயர்க் காரணங் கூறலும் பாயிரத்துப் பயன்தருவ தென்னலாம. அக்காரணமும் இதனுள் அமைந்து கிடக்கின்றது.

"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாக
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

என்றதனால் சிலப்பதிகாரப் பெயர்க்காரணம் தெளிவாய் விளங்கிற்று.

இனி, 'கேட்போர்' என்ற உறுப்பில் அன்னவர் பெயரும் பெருமையும் அவர் நூலினைக் குற்றந்தீர ஆராய்ந்தமையும் சேர வுணர்த்தற் பாலன. 'தண்டமிழ்ச் சாத்தன்' எனவும், 'மதுரைக் கூலவாணிகன் சாத்தன்' எனவும் அவர் மதுரையிற் றமிழாராய்ந்த சங்கத்துச் சான்றோர் என அவர் பெயரும்பெருமையும் குறிக்கப் பட்டது. அன்றியும் அவர் அக்காலத்துச் சேரவரசன் செங்குட்டு வன்பாற் சிறப்புற்றிருந்தமை 'அவனுழையிருந்த' என்ற குறிப் பால் தெளிவாம். பிறர்நூற் குற்றங்காணுவதில் அவர் மிகவும் வல்லுநர் என்ப. அஃது ஏனைய சங்கப்புலவர்களாலும் பாராட்டுப் பெற்றுள்ளது. இதனைத் 'தலைக்குத்துத் தீர்வுசாத்தற்கு' என்னும் பழம்பாடலால் அறியலாம். அத்தகைய புலவர்பெருமான் இச் சிலப்பதிகாரத்தை அடிகளருள இனிதுகேட்டிருந்தனர் என்ற குறிப்பால் இந்நூலின் குற்றந்தீர்ந்த தன்மை தெற்றென விளங் கும். முழுதும் பழுதற்ற முத்தமிழின் பாடலாகச் சிலப்பதிகாரம் சிறப்புற்ற காரணமும் இதுவே என்க.

இனி நுதலியபொருளை இப்பதிகம் தெளிவுறுத்தும் முறை யும் மிக்க நயமுடையது. மூவகை உள்ளுறையாகத் தொகுத்துச் சுட்டிய அதனைப் பதிகத்தின் முகப்பில் காப்பியத்தின் கதைச் சுருக்கமாக ஆசிரியர் வகுத்துக்காட்டி யுள்ளார். அதன் அழகு யாவரும் அறிந்து இன்புறுந்தகையது.

காப்பியத்தின் கதைநிகழ்ச்சியான கோவலன்-கண்ணகி வரலாறு குன்றக்குறவர் வாயிலாகவும் தண்டமிழ்ச்சாத்தர் வாயிலாகவும் ஆண்டு வெளிப்படுகின்றது. 'பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்' என்பதுமுதல் 'இறும்பூது போலுமிஃ தறிந்தருள் நீ' என்பதுகாறும் கண்ணகிவரலாற்றின் கடைப்பட்ட பகுதியைக் குன்றக்குறவர் கூறினர். அதனைத்தொடர்ந்து தண்டமிழ்ச்சாத்தனார் 'ஆரங் கண்ணிச் சோழன் மூதூர்' என்று தொடங்கி 'பலர் புகழ் பத்தினி யாகுமிவள்' என்று அவள் வரலாற்றின் முற்பட்ட பகுதியைக் கூறிமுடித்தார். இவ் விருபகுதிகளையும் முன்பின்னாக இயைத்துக் கூட்டுமிடத்துக் காவியத்தின் கதைச்சுருக்கம் உரைக்கப் பட்டதாகும்.

அஃதாயின் இவ்வரலாறுகளை முன்பின்னாக முறைபிறழ வைத்த தென்னையோ வெனில், கூறுவேன். சிந்தாமணி மணிமேகலைப் பதிகச்செய்யுட்கள் தம் காப்பியக் கதைச்சுருக்கத்தைக் கவிக்கூற்றாகச் செவ்வனே அமைத்துச் செல்கின்றன. ஆயினும் இவ்வாசிரியர் இளங்கோவடிகள் இம் முறைபிறழ்ந்த வைப்புமுறையால் பற்பல நயங்கள் புலப்படக் கண்டனர்.

சிலப்பதிகாரக்கதை கேட்போர்க்குக் கிளர்ச்சியுண்டாக மேன்மேல் வேட்கை மிகுவிப்பதென்பது அவ்வமைப்பினில் அறியக் கிடக்கின்றது. 'ஒருமுலையிழந்த திருமாபத்தினி, கட்புலக்காண விட்புலம் படர்ந்ததைக் குன்றக்குறவர் இறும்பூதுபயக்க எடுத்துரைத்த காரணத்தால் அரசனும் அடிகளும் அதனை முழுவதும் அறிய விழைவுடையராயினர். உடனே அக்குறிப்புணர்ந்த சாத்தர் 'யானறிகுவ னது பட்டது' என்றெடுத்து அக் கதைநிகழ்ச்சியை ஒருவாறு முற்றுவித்தார். ஆயினும் அரசன் அவ்வளவினமையாது 'வினைவிளை காலமென்றீர் யாதவர் வினைவிளைவு' என அதனை மேலும் வினவ வேட்கைகொண்டான். ஆகலின் இக்குறிப்பால் கண்ணகிகதை கற்றோர்க்கு மிகுதியும் அவாவினை அளிக்க வல்லதென்பது போதரும். இக்கருத்து விளங்குதற்பொருட்டே காப்பியப்புலவர், மருட்கை யென்னும் மெய்ப்பாடமைந்து வியப்பும் வேட்கையும் மீதூருமாறு, பிந்திய கதைநிகழ்ச்சி யுடையதா

யினும் குறவர்கூற்றுன வரலாற்றை இப்பதிகச் செய்யுளுக்கு ஏற்ற தொரு தோற்றுவாயாக முதற்கண்வைத்து மொழிவாராயின தென்க.

இன்னும் இளங்கோவடிகள் இக்கதைச்சுருக்கத்தைத் தாமே கூறுமல் அவரவர் வாய்மொழியாக அமைத்துவைத்த முறையில் வேறொரு சிறந்தபயன் உண்டு. இக்காப்பியத்தின்கண் உலகியல் கடந்த அற்புத நிகழ்ச்சிகள் பற்பல காணப்படுகின்றன. அவை மானிடர்முன்னே தெய்வந்தோன்றலும், ஏவல் கேட்டலும், பழம் பிறப்புணர்த்தலும், விண்ணுலகேற எடுத்துச்சேறலும் பிறவுமாம். அவை யாவையும் வாய்மையேயாதல் வற்புறுத்தற்கு ஈண்டுக் குற வரையும் சாத்தனுரையும் அவர் கரிபோக்கிக் காட்டினரென்க.

கண்ணகி விண்ணுலகடைந்த வரலாற்றைக் குறவர் 'எம் கட் புலங்காண விட்புலம் போயது இறும்பூது போலும்' என்று கூறிய துணேயே சங்கப்புலவராகிய சாத்தனுர், அஃது இறும்பூதுபயப்ப தாயினும் உண்மையில் நிகழ்ந்ததே என்னுங் கருத்தால் 'யானறிகு வனது பட்டது' எனத்தொடங்கி, வெள்ளியம்பலத்து நள்ளிருட் கிடந்தேன்' 'கோட்டமில் கட்டுரை கேட்டனன் யான்' என்றெல் லாம் அதன் வாய்மையை வலியுறுத்துவாராயினர். ஆகவே இவ் வரலாறுகளே அவரவர் வாய்மொழியாக அமைத்தது இங்கு மிகப் பயன்தருவதாயிற்று.

இனி வேறுவகையாலும் இவ்வமைப்பின் பயன் விரித்துரைக் கத்தகும். அறிவுடையாரும் அஃதில்லாதாருமென உலகமாந்தர் ஓர் இருபகுதியர். யாதானுமொரு பொருளின்கண் விழைவும் வெறுப்பும் அவரவர் அறிவினளவாக அமைதலின் இருதிறத்தா ரும் இயைந்து இனியவாக ஏற்றுக்கொள்வன மிகச்சிறுபான்மைய. அத்தகை அருமையும் இச்சிலப்பதிகாரக் காப்பியக்கதைக்கு வாய்ந்துள தென்பதை அவ் விருவரலாறுகளும் அறிவுறுப்பன வாம்.

இக்கருத்தானன்றே ஆசியர் இளங்கோவடிகள் அறிவுடை முது மக்கள் சார்பாகச் சங்கப்புலவரையும் அறிவுமுதிராத பொதுமக்கள்

சார்பாகக் குன்றக்குறவரையுங்கிறுத்தி அன்னவர் வாயிலாகப் பத்தினியின் பெருமையைப் பாராட்டினரென்க. எனவே உலகத்துப் புலவர்களேயன்றிப் பொதுமக்களுமகப்பட எல்லார்க்குமொக்க இன்பம் பயக்கும் இயல்பிற்று இக் கண்ணகிகதை யென்பது நன்கு பெறப்பட்டது. அக்கதைநிகழ்ச்சியையே பொருளாகக்கொண்ட இக்காப்பியத்தின் இயலும் கற்ருேர்க்கும் மற்ருேர்க்கும் கழிபேருவகை விளக்குமென்பதில் ஐயமென்னை? கற்றவர்கள் இதனைப் பலகாற்பயின்று இன்புறுவர்; மற்றவர்களும் இதன்பெருமையைப் பிறர்வாயிலாகக்கேட்டு மகிழ்வெய்துவரென்க.

அற்றேல் இன்னோன்ன பொருட்குறிப்புகள் ஈண்டைக்கு எய்தா; குறவர்கூற்றும் சாத்தனர்கூற்றும் கதைச்சுருக்கமொன்றே கூறுதற்பயத்த எனின்; அற்றன்று. கதைச்சுருக்கம் ஒன்றுகூறுதலே ஆசிரியர்கருத்தாயின் சிந்தாமணி மணிமேகலைப் பதிகங்களிற்போல அவர் அதனைத் தமதுகூற்ருக மாற்றிக்கூருது பிறர்வாய்மொழியாகப் பேசியிருப்பது பயனின்ருய் முடியும். ஆகலின் ஆண்டைக்கு அவ்வாறெல்லாம் பொருள்கோடல் அவாது உட்கோளாதல் உய்த்துணரற்பாற்று.

என்னை? அடிகள் நிகழ்ந்தவற்றை நிகழ்ந்தவாறு வரைந்து சென்ருராகலின் அவ்வரலாறுகள் அங்ஙனம் அமைந்ததன்றிப் பிறிதன்று என்பார்க்கு; அஃதொக்குமன். ஆயினும் அவ் வரலாறுகளை நிகழ்ந்தபெற்றியே சிறிதும்பிறழாது இப் பதிகத்துப் பகர்தல்வேண்டும் என்னும் நியமமின்று. அன்றியும் உலகத்துக் காப்பியஞ்செய்வார் பலரும் தமது மனப்பான்மையொடு பொருந்த நிகழ்ந்தவற்றுள்ளும் வேண்டுவனகொண்டு வேண்டாதவற்றை விடுத்துக் கேட்போர்க்கு இன்பம்பயக்க இயற்றுதலே கிழமையாகக் கொண்டாராகலானும், உண்மையில்நிகழ்ந்த தன்மை ஒன்றையே கருதிக் காவியச்சுவையில் வேறு சிறந்த பயனில்லாதவற்றை அவர் ஆண்டுப் புகவிடுவதில்லையாமாகலானும் அவ்வுரை அமையாதென விடுக்க.

இனி, அவ்வரலாறுகளின் அமைப்பினுல் இப் பனுவலுட்பயிலும் பாத்திரங்களெல்லாரினும் கண்ணகியே தலைமைபெறுதற்

குரியவள் என்பதும் ஒருவாறு தெளியலாகும். இக்கருத்து வெளிப்படவே, ஆசிரியர் இளங்கோவடிகள் காவியங்கற்பார்க்கு அக் கண்ணகியின் பெருமையைக் குறவர்வாயிலாக முந்துறமுன்னம் அறிமுகஞ் செய்வாராயினர். கண்ணகி விண்ணுடுசென்றது கதை நிகழ்ச்சிகள் பிறவனைத்தினும் பிற்பட்டதொன்றாகவும் சாத்தனார் கூறிய வரலாறே முற்பட்ட நிகழ்ச்சியை யுடையதாகவுமிருப்ப அவற்றை இப்பதிகத்துத் தலைதடுமாற்றமாகத் தந்துரைத்ததற்குத் தக்ககாரணம் வேண்டுமன்றே? சாத்தனார்கூறிய வரலாற்றினின்று பொதுவாகக் கோவலனுங்கண்ணகியும் கதைத்தலைவராவரென்பதே பெறப்படுவதன்றி, கோவலனைக் காட்டிலும் கண்ணகியின் சீர்மை விஞ்சியிருக்குமென்பது கண்டறியுமாறில்லை. குன்றக்குறவர் வரலாற்றின் அது தனிமையாகவெடுத்துப் பத்தினியின் சிறப்பினைப் பாராட்டுகின்றதாகலின், அதனைத் தோற்றுவாய்க்கண் அமைத்து, அப் பத்தினிக் கடவுளே இப் பனுவலுள் முதன்மையாகக் கொள்ளப்பட்டனளென்பதை அடிகள் குறிப்பாக அறிவுறுத்தினரென்க.

அஃதாயின் சிலம்பணிந்தவளேற்றம் உரைத்தலின் இந்நூல் சிலப்பதிகாரமென்னும் பெயர்த்து என இதன் பெயர்க்காரணமுணரும்முகத்தும் அப்பொருள் தானேவிளங்கிக்கிடந்ததால்எனின்; அஃதொக்கும். ஆண்டு மிகவும் உய்த்துணருமாறு வைத்த பொருளை ஈண்டுச் சிறிதுவெளிப்படுத்திக்காட்டியதுகுற்றமாகாது. அது விளங்கவைத்தல் என்னும் குணமாம். ஓரிடத்துக் குறிப்பாற் கொள்ளவைத்ததனை மற்றும் பலவிடங்களிற் சிறிதுசிறிதாக வெளிப்படுத்திச்சேறல் காப்பியம்புனைவார் எல்லார்க்குமொத்த இயல்பு. அக்கோட்பாடுபற்றி இளங்கோவடிகளும் அவ் வரலாறுகளை இங்ஙனம் அமைத்தனரென்றல் பொருத்தமுடைத்தென்பது.

மேல் மங்கலவாழ்த்துப் பாடலிடத்தும் இவ்வாறேகண்ணகியை முற்கூறி அவளைப் பின்சாரக் கோவலனைவைத்துச் சிறப்பித்துள்ள முறைமை இதனை வலியுறுத்தும். இறுதியாக வரந்தருகாதைக் கண்ணும், 'இமையோ ரிளங்கொடி தன்றிற முரைத்த தகைசால் நன்மொழி' என ஆசிரியர் இவ்வுண்மையினை ஐயமின்றித் தெளியுமாறு அறுதியிட்டமை நோக்கிக்கொள்க.

அஃதேல் பிறவிடத்தெல்லாம் அப்பொருள் புலப்படுத்தல் ஆசிரியர்க்குக் கருத்தேயாயினும் ஆயிடுக; நிகழ்ந்ததை நிகழ்ந்த வாறுவரைந்துவைத்த இவ்வரலாறுகளிடத்து இப்பொருட்குறிப்புகள் ஏலாவாம் பிறவெனின்; என்னை? 'அரும்பய னாயு மறிவினர் சொல்லார், பெரும்பய னில்லாத சொல்' என்பவாகலின், அவ் அரும்பயன் ஆய்ந்துசொல்லவல்ல அடிகள்வாக்கிற்கு இவையெல்லாம் அழகுசெய்வனவாக. எனவே இதனாற்போந்தது, சான்றோர் செய்யுட்களிற் பொருள்நயங்கள் எத்துணையவாக எய்துதற்குரியன அவை அத்தனையும் அவர் கருத்தொடுபட்டனவே என்றலிற் சிறிதும் ஐயமின்று என்பதாம்.

அற்றேல் அஃதாக. கண்ணகியோ ஒரு பெண்பாலாகலானும், அவள்தனக்கும் தலைவனென்று கோவலனைக் கூறுபவாகலானும் ஈண்டு அவட்குத் தலைமைசாற்றுதல் உலகியலோடு ஒவ்வாமை யுடைத்தே எனின்; அங்ஙனன்று. உலகியல் வழக்கினில் துணைவனுந்துணைவியுமாய இருவருள் ஆண்பாலொருவனே தலைவனாவனெனினும், காப்பியவழக்கினுள் ஆண்பாலாகப் பெண்பாலாகத் தம் குணஞ்செயல்களான் மேம்படுதலுடையா ரெவரோ அவரே தலைவராக மதிக்கற்பாலர். அன்றியும் கோவலன்கதை மதுரைக் காண்டத்திடையே முடிவெய்துவதாகவும், கண்ணகிகதையே வஞ்சிக்காண்டத் திறுதியளவும் வழங்கிவருதலானும் இக்காப்பியத் தலைமை அக் கற்புடையணங்கினுக்கு முதன்மையினுரியதென்றல் இழுக்காதாயிற்று. இது நிற்க.

இப்பதிகத் தோற்றுவாய் இங்ஙனம் அமைத்ததில் ஆசிரியர் கருத்தான வேறொருபயனும் விரித்துரைக்கத்தகும். கண்ணகி கதையைக் காப்பியம்புனைய இளங்கோவடிகள் என்ன இயைபினர் என மாணாக்கர்க்கு ஐயம்நிகழுமன்றே? அவ்வையநீங்கவும் இவ்வரலாறு உதவுவதாகும்.

குன்றக்குறவர் 'எமதூர்மலைப்பக்கத்து ஒருமுலையிழந்துவந்தாள் ஒரு மாபத்தினி; அவள்பொருட்டு இந்திரன்தமர் ஈண்டிவந்து அவள் கொழுநனைக்காட்டி அவளோடு எம் கட்புலம்காண விட்புலம்போயினர்; இஃது அதிசயமாயிருந்தது, அறிந்தருள்நீ' என

இளங்கோவடிகட்குக் கூறினர். எனவே அதுகேட்டு வியந்த அடிகள் பத்தினிக்கடவுள்பொருட்டுச் செய்யுளியற்றிச் சிறப்புச் செய்ய உரிமையுடையராயினர்.

கண்ணகிதேவி தன் கடவுட்டன்மையை மலைநாட்டகத்து நிலையிட்டுச் சென்றமையால், அவ்வியைபுபற்றி அந்நாட்டு வேந்தன் சேரன்செங்குட்டுவன் அவட்குக் கோயிலெடுப்பித்துக் கொண்டாடுவானாயினன். அவ்வாறு தம்முன்னோன் கோயிலியற்றினாற்போல அச்சோரற்கிளவலாகிய அடிகளும் அத்தெய்வத்திற்குத் தமது காவியப்பூங்கோயிலியற்றிக் கடமையை நிறைவேற்றுவாராயினர்.

இவ்வியைபினைத் தம் நூலின்முடிவிலும் இளங்கோவடிகள் விளங்கக் கூறியுள்ளார். 'என்றிற முரைத்த இமையோ ரிளங்கொடி, தன்றிற முரைத்த தகைசால் நன்மொழி' என்றது காண்க. செங்குட்டுவன் கண்ணகிக்குப் பத்தினிக்கல் நாட்டியவிடத்து இளங்கோவும் உடனிருந்தனர். அப்பொழுது தேவந்திகை மீது தெய்வந்தோன்றி அடிகளின்றிறத்தை அறியக்கூறிற்று. ஆகலின் அவரும் அதற்குசாடாக இக் காப்பியத்தை இயற்றியருளினர் என்ப. ஆகவே இவ்விரண்டுரிமையும் சேர்ந்து சிலப்பதிகாரத்தைத் தோற்றுவித்தன என்னலாம்.

இனி, காப்பியத்தலைவியாய கண்ணகிக்குக் கற்பினாலமைந்த கடவுட்பெருமையையும் இப் பதிகச்செய்யுளில் பாக்கக் காணலாகும். அஃது எங்ஙனமெனிற் கூறுவேன்.

'ஒருமுலை யிழந்த திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் தமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி'

என்றதனாற் கண்ணகிநல்லாளுக்குத் தேவர்கள் பணிவுடன் சிறப்புச்செய்தமை தேறப்படும்.

'மூத்தார மார்பின் முலைமுகம் திருகி
நிலைகெழு கூடல் நீளெரி யூட்டிய
பலர்புகழ் பத்தினி யாகு மிவள்'

என்றமையால் அங்கியங்கடவுளை அவள் ஆணைகொண்டாண்டமை அறியப்படும். அன்றியும்,

'ஆரஞ ருற்ற வீரபத் தினிமுன்
மதுரைமா தெய்வம் வந்து தோன்றிக்
கொதியழற் சீற்றங் கொங்கையின் விளைத்தோய்
முதிர்வினை நுங்கட்கு முடிந்தது'

என்று கூறியவதனால் மதுராபதி தானாகவந்து தோற்றஞ்செய்து அவள் சீற்றமுந் தணிவித்துச் சென்றமை தெளிவாமென்க.

இதன்கண் 'வந்துதோன்றி' என்றதன் கருத்தமைதி சிறிது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. உலகத்து மக்கள் பலரும் கடவுளர் முன்னிலையிற் றாமேசென்று பாடுகிடத்தல்முதலாகப் பன்னெடு நாட்கள் வழிபாடாற்றித் தமது குறையுறவினைக் கூறிக்கோடல் மரபாயிருக்கவும், கற்புக்கடம்பூண்ட கண்ணகிமாட்டு அத்தெய்வந் தானே அச்சமும் அடக்கமுங்கொண்டு 'முன்னிலையீயாது பின்னிலைத்தோன்றிக்' 'கேட்டிசின் வாழி நங்கை யென்குறை' எனத் தன் குறையுணர்த்துவான் கட்டுரைகூறி அழல்வீடுகொண்ட தெனின் அவளது தெய்வமாண்பினை வேறோராற்றால் விளக்கலும் வேண்டுமோ? இப்பொருட்சிறப்பினைக் கருதியன்றே, ஆசிரியர் மேல் அழற்படு காதையுள்ளும் 'கொந்தழல் வெம்மையிற் கூரெரி பொருள், வந்து தோனறினள் மதுரா பதியென்' என்று இவ்வாறே கூறிப்போந்த தென்க. இதுநிற்க.

ஈண்டு முலையிலியாகத் தலைவியைக்கூறியது வழுவுடைத்தன்றோ எனின்; அது நன்கு வினவிற்றும். உறுப்புக்குறையால் விசேடித்தல் வெறுப்புக்கிடனென் றொழிக்கற்பால தெனினும், சிறந்த பொருள் பயக்குமாயின் அதுவும் ஓராற்றான் அமையும் என்ப. பொற்கைமாறனைக் கைகுறைத்தானென்றல் புகழ்க்குறைபாடின்றாயினாற்போல, கண்ணகியை முலைகுறைத்தா ளென்றாலும் காப்பியச் சுவையின் இழுக்காதாயிற்று. செழியன் தன் கைகுறைத்துச் செங்கோன்மை நிலையிட்டான்; கண்ணகி தன் கைகுறைத்துக் கற்புடைமை நிலையிட்டாள். ஆகலின் அவள் முலையிழந்த செய்தியை ஆண்டுக் குறிப்பிடுவதெல்லாம் அவள் பெருமைக்கே நிரூபகமாமென்பது ஒருதலை.

இச் சிறப்புப்பற்றியே ஆசிரியர் முலையிழந்த என்னும் அடையினாற் பத்தினித்தன்மையை விசேடித்து 'ஒருமுலை யிழந்த திருமா பத்தினி' என்று உரைப்பாராயினர். மேலும் அவர் 'முத்தார மார்பின் முலைமுகம் திருகி' எனவும், 'கொதியழற் சீற்றங் கொங்கையின் விளைத்தோய்' எனவும் இப்பதிகச் செய்யுளிலேயே பலவிடத்துக் குறிப்பிடுதல் காணலாம். நூலுள்ளும் இவ் அடைமொழியை விசேடணமாகப் பெற்று இங்ஙனமாக வருமிடங்கள் மிகப்பல.

அஃதாயின் இவ் வுறுப்புக்குறை விசேடணத்தை ஆசிரியர் ஓரோவிடத்துக் கூறியமையாது பலவிடத்தும் பகர்ந்துசெல்லுதல் எற்றுக்கெனின்; கூறுவேன். யாதானுமொரு சொற்றொடர்க்கண் சிறந்த கருத்தினைப் பொதிந்துவைத்ததுண்டாயின் அதனைப் பலவிடங்களில் எடுத்துக்காட்டி விளங்கவைத்தல் பண்டைநூலாசிரியர் எல்லார்க்குமொத்த இயல்பாமென்க. இதனைத் 'தன்குறிவழக்கம் மிகவெடுத்துரைத்தல்' என்னும் தந்திரவுத்தியாக இலக்கணநூல் வழங்கும். எனவே இளங்கோவடிகள் பலவிடத்தும் முலையிலியாகக் கண்ணகியைச்சிறப்பித்ததெல்லாம், தமது குறிக்கோளை விளக்குதற்கு அவர் கையாண்ட ஒரு காப்பியப்புணர்ப்புவிசேடமெனக் கருதி இன்புறற்பாற்று.

அற்றேல் அஃதாக; முலையிழந்த என்றமையாற் பத்தினித்தன்மை பாராட்டப்பெறுவது எங்ஙனமெனிற், கூறுவேன். கோவலன் கொலையுண்டஞான்றே கண்ணகியும் உடனுயிர்நீக்கக் கடவளாயிருக்கவும் அவள் அது செய்யமாட்டாமை நேர்ந்த காரணத்தால் உயிர்வாழ்க்கையில் உவர்ப்புற்றாளாய், 'கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கைதன்னைக் கிழங்கோடும் கிள்ளிக் களைந்து' விட்டெறிந்தாள். அந்நிலையே அழற்றெய்வமும் அவள் குறிப்பறிந்து ஏவல்கேட்கமுற்பட்டது. 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை' என்ற பொய்யாமொழியின் பொருளுரைக் கேற்ப, இங்ஙனம் கடவுளர்தமக்குங் கட்டளை

விதித்தலை உலகத்துமகளிர் கற்புநிலையளத்திற்குச் சிறந்ததொரு கருவியாக உயர்ந்தோர் கூறுவராகலின், கண்ணகி முலைதிருகி யெறிந்த அவ் வரியசெயலே அவளது பத்தினித்தன்மையைப் பலருமறிய நிலைநிறுத்திற் றென்பது வெளிப்படை.

அற்றேல் அஃதாக; கண்ணகி தான் நாணழி பூசல் செய்தமையால், கற்புடையளென்றல் சாலாதாம்பிற வெனின்; அறியாது சொல்லினை. அறக்கற்பும் மறக்கற்பும் என அக் கற்புடைமை இருவகைத்து. அவற்றுட் கண்ணகியுடையது மறக்கற்பாகலின், அவள் பெண்ணியல்கடந்து பெரும்பூசல்விளைத்ததெல்லாம் அவளது வீரத்தை மிகுவித்துக் கற்பினையே மேம்படுத்திற்றென்பது. இக் கருத்தினை யுட்கொண்டே ஆசிரியர் இளங்கோவடிகள் இப்பதிகத்து, 'ஆரஞருற்ற வீரபத்தினி என' அவளுடைய சிறியகற்பினைத் தெளிவுறக் கிளந்து, அஃது ஆறியகற்பின் வேறாதல்காட்டி, இங்ஙனம் எழுதற்குரிய ஐயவினாவுக்கு ஓர் அமைதிகூறிச் சென்றனர் என்க.

எனவே, இக் கூறியவற்றான் 'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும், ஆடமைத்தோ ணல்லார்க் கணியும்போல்" சுருங்கச்சொல்லல் முதலிய வனப்பும் பிறவும் விளங்கத்தோன்றும் இப் பதிகம் இவ் வியலிசைநாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுட்குப் பல்லாற்றானும் வாய்ப்புடைத்தென்பது ஓராற்றான் விளங்கிற்று. மற்றும் இச்செய்யுளின் மாண்புகள் முழுமையும் வரையப்புகின் 'மம்மர் நெஞ்சத் தெம்மனோர்க்கு ஒருதலை கைம்முற்றல்'. ஆகலின் ஈண்டு இவ்வளவின் அமைகின்றேன்.

உ

கம்பர் கவியில் அருஞ்சொற் பிரயோகம்.

[பண்டித, ஆ. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள், மதுரை.]

"நாரா யணனை நராயணனென் றேகம்பன்
ஓராமற் சொன்ன உறுதியால்—நேராக
வாரென்றால் வரென்பேன் வாளென்றால் வளென்பேன்
நாரென்றால் நரென்பேன் நன்".

என்பதாக "வசைபாடக் காளமேகம்" என்று புகழப்பெற்ற காள மேகம் கூறிய செய்யுள் ஒன்றுண்டு என்பர்.

நாராயணன் என்ற பெயர் நராயணன் என்று செய்யுட்சந்தப் பொலிவுக்காகக் குறுக்கப்பட்ட விகாரப்பெயரால் வருதலாகு மெனின், வார்-வர் எனவும், வாள்-வள் எனவும், நார்-நர் எனவும் வருதலேயன்றி, நானென்னும் தன்மையொருமைப்பெயர் நன் என்று வருதலும் ஆகுமன்றே? நான் அவ்வாறுவரச் செய்யுட்பாடு வேன் என்று இச்செய்யுளிலேதானே நன்என்றபதப்பிரயோகமும் செய்துவிட்டான் காளமேகம்!

இச்செய்யுளால் நாம்அறிவது.

கம்பர் தொன்றுதொட்டுச் சான்றோரால் ஆளப்பட்டுவந்த முறையில் செய்யுள்விகாரச் சொற்களை ஆளாமே தமக்குத் தோன் றியவாறெல்லாம் செய்யுள்விகாரம் பெற்றனவாக மொழிகளை அமைத்துக்கொண்டு செய்யுள்களின் சந்தப்பொலிவொன்றையுமே நோக்கிச்சென்றுளார் என்பதே காளமேகம் கருத்தாதல் அச்செய் யுளால் அறியப்படும். அவ்வாறு மரபுபற்றாது செய்யுள்விகாரங் களை அமைத்தலோ சந்திமுடிபுகள் கொள்ளுதலோ இலக்கணவரம் பழிக்கும் செயலாகும் எனவும் அது போக்கற்றதொன்றெனக் கொள்ளுமாறின்று எனவும் கருதற்கிடமுமாகின்றது.

நாராயணனை நராயணன்என்று கம்பர் கூறிய செய்யுள், இரணியன்வதைப் படலத்தில் வரும்,

1 "ஓநமோநா ராயணாவென வுரைத்துள முருகித்
தான மைந்திரு தடக்கையும் தலையின்மேல் தாங்கிப்
பூநி றக்கண்கள் புனலுக மயிர்புறம் பொடிப்ப
ஞான நாயகன் இருந்தனன் அந்தணன் நடுங்கி"

(இரணியன்வதை: 23)

என்பது.

இது ஐந்துசீர்கள் பெற்றுவந்த கலிநிலைத்துறை. இதன் முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களாகவும் ஏனையவை விளஞ்சீர்களாகவும் வருதல்வேண்டும். அவ்வாறு வருமிடத்தும், இரண்டாஞ்சீரின் முதலசைநேரசையாகப்பெற்ற கூவிளஞ்சீரே வருமாறு பாடப்பெறும் அமைப்புடையது இக் கலிநிலைத்துறை.

இந்தக் கலிநிலைத்துறையின் அமைதியை மேலேகாட்டிய கம்பர் பாடலின் கடைசியடியாலே இனிதுணரலாம். என்னை? அக்கடையடியின் சீர்கள்எல்லாம் முழுச்சொற்களா யமைந்திருத்தலின் என்க. அவ்வடியைச் சீர்முறைப்படிபிரித்து அலகிட்டுக் காட்டுதும்.

	1	2	3	4	5
செய்யுளடி -	ஞான	நாயகன்	இருந்தனன்	அந்தணன்	நடுங்கி
சீர்கள் -	தேமா	கூவிளம்	கருவிளம்	கூவிளம்	புளிமா
அசைகள் -	நேர்நேர்	நேர்நிரை	நிரைநிரை	கூவிளம்	நிரைநேர்

மேலே காட்டிய அடியுள் முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களாகவும், ஏனையவை விளஞ்சீர்களாகவும், இரண்டாஞ்சீரின் முதலசை நேரசையாகவும் இருத்தல் அறியத்தகும்.

இவ்வாறாகிய யாப்பமைதியுடைய கலிநிலைத்துறைச் செய்யுளில், நாராயணன் என்ற பதத்தை,

"ஓநமோநா ராயணா எனவுரைத் துளமுருகி" என்று அமைத்தலும் வழுவாம். என்னை? இவ்வடியின் இரண்டாஞ்சீர், நேரசையை

முதலாகவுடைய விளஞ்சீராகாமே, மாச்சீராதல் ஒன்று; இவ்வடியின் ஐந்தாஞ்சீர் கருவிளங்காய்ச் சீராகி மாச்சீராகாமை மற்றொன்று; என்று முடிந்து இரண்டு குற்றங்கள் தங்கும். இனி, அவ்வடியை, "ஓந மோநாரா யணவென உரைத்துள முருகி" எனக்கொள்ளின் இரண்டாஞ்சீர் இக் கலிநிலைத்துறைக் காகாத தேமாங்காய்ச்சீராகிக் குற்றப்படுகின்றது.

இத்தன்மை நோக்கிக் கம்பர், அந்த அடியில் "ஓந மோநரா யணவென உரைத்துள முருகி" என்று நாராயணனை நராயணனாக்கி இரண்டாஞ்சீரை நேரசை முதலாகிய விளஞ்சீராக்கிக் கொண்டு கலிநிலைத்துறையின் சந்தப்பொலிவைக் கெடாமல் காத்துக்கொண்டார். இது "குறைக்கும் வழிக்குறைத்தல்" என்னும் செய்யுள்விகாரம்; வழுவன்று. ஆகவும் இதனைக் காளமேகம் குறைத்துக்கூறியதென்? எனின், அது புலமைநோக்கானன்றிப் பொதுநோக்காற் கூறியதெனக்கொள்க.

ஆகவே கம்பருக்குச் செய்யுட்சந்தப்பொலிவிலே மிகுந்த கருத்துண்டு என்பதும் அதன்பொருட்டு முன்னோர்சென்ற நெறியினின்று விலகியும் அவர் சொற்களை முடித்துச்செல்வார் என்பதும் புலனும்.

செய்யுளின் சந்தப்பொலிவுக்காகக் கம்பர் அரியவாகிய சில செய்யுள்விகாரங்களை அமைத்தும் பாடிச்செல்வர் என்றோம். அவர் அவ்வாறு பாடியுள்ளன சில செய்யுட்களைத் தருதும்.

2 "ஆயின அளவையின் அனல்முகவாய் அடுகணை அவன்விட இவன்விடலும்
தீயினும் எரிவன உயிர்பருகச் சிதறின கவிகளோ டினமிருதர்
போயின திசைதிசை யனநிறையப் புரள்பவர் முடிவிலர் பொருதிறலோர்
ஏயின ஒருவரை ஒருவர்குறித் தெரிகணை இருமழை பொழிவனபோல்"

(இந்திரசித்தன் வதை. 22)

இச்செய்யுள் மூன்றாஞ்சீரும், ஆறாஞ்சீரும் காய்ச்சீர்களும் ஏனைய விளஞ்சீர்களுமாகிய அறுசீர்விருத்தம். இதன் முதற்சீர் நேரசை

முதலாகிய கூவிளஞ்சீராகவும் ஏனைய ஐந்துசீர்களும் நிரையசை முதலாகிய சீர்களாகவும் வரும் இயல்பினது.

இச் செய்யுளின்கண் உள்ள விளஞ்சீர்கள் யாவும் குறிலிணை யிறுதியாகிய சீர்களாகவே வருவதல்லால் குறினெடில் இறுதியாகிய விளஞ்சீராக வருதலில்லை என்பதை இச்செய்யுளின் அடிகளானினும் இதனை அடுத்துள்ள இச் சந்தமுடைய பாட்டுக்களாலும் அறியலாகும்.

இத்தன்மையான யாப்பமைதியை நோக்கிக் கம்பர், இச் செய்யுளின் இரண்டாமடியில், "ஓடின" என்னும் சொல்லை நெடு முதல் குறுக்கி "ஒடின" என வழங்கினர். இது "குறுக்கும் வழிக்குறுக்கல்" ஆகிய செய்யுள்விகாரம்.

இராமனுடைய சடுகணையால் அவதிப்பட்டு வந்து அபயம் வேண்டிய வருணன், தான் காலந்தாழ்த்ததற்காகிய காரணத்தைக் கூறுகின்றவன் "ஏழாஞ் செறிதிரைக் கடலின் மீனின் போர்த்தொழில் விலக்கப்போனேன் அறிந்திலேன் புகுந்ததொன்றும்" என்னும் கூற்றிலே போர்த் தொழில் விலக்கப் போனேன்" என்ற தொடரினுக்குப் பொருந்திய சிறப்புடை எதுகைத்தொடையை வேண்டி,

3 "பார்த்தனிற் பொறையின் மிக்க பத்தினிக் குற்ற பண்பு
வார்த்தையி னறிந்த தல்லாற் றேவர்பால் வந்தி லேனல்
தீர்த்தநின் னுணையேழாஞ் செறிதிரைக் கடலின் மீனின்
போர்த்தொழில் விலக்கப் போனேன் அறிந்திலேன் புகுந்ததொன்றும்"
(வருணனை வழிவேண்டு: 76)

என்று அமைத்துப் பாடியுள்ளார்.

இச்செய்யுளில், வார்த்தை, தீர்த்த, போர்த்தொழில், என்பன எதுகையாதற்காகப் "பார்த்தனில்" என்று அடியைத்தொடங்கியிருக்கின்றார். அத்தொடரில் ஒற்று இரட்டிக்க இலக்கணம் இடங்கொடாது. ஒற்றை இரட்டித்துக் கம்பர் பாடியிருப்பது அவர் சந்தப்பொலிவொன்றையே கருதிய முனைப்பான்மையை இனிதுகாட்டும்.

ஒற்று இரட்டிக்க வேண்டாத இடத்து ஒற்றை இரட்டித்துப் பாடிய கம்பர், ஒற்று இரட்டிக்கவேண்டும் இடங்களிலே ஒற்றை இரட்டியாமலும் பாடிச்சென்றிருக்கின்றார். அவர் அவ்வாறு பாடிய செய்யுள்களையும் தருதும்.

4 "மாதிரங் கடந்த திண்டோள் மைந்தன் றன் மகுடச்சென்னி
போதலை புரிந்த யாக்கை பொறுத்தனன் புகுதக் கண்டார்
ஓதநீர் வேலை யன்ன கண்களால் உகுத்த வெள்ளக்
காதல்நீர் ஓடி யாடற் கிருங்கடல் மடுத்த தன்றே"

(இராவணன் சோகப்: 42)

என்னும் செய்யுளில் "போதலைப்புரிந்த யாக்கை" என்று வரற்பாலதனைப் "போதலை புரிந்த யாக்கை" என்றே கூறிவிட்டார்.

5 "பெரிய திண்புயன் நீயுளை தவ்வரம் பெரிதால்
உரிய வேண்டிய பொருளெலாம் முடிப்பதற் கொன்றோ
இரிய தேவரைக் கண்டனம் பகைபிறி தில்லை
அரிய தென்னெமக் கென்றனர் அவன்கருத் தறிவார்"

(படைக்காட்சி: 33)

என்னும் செய்யுளில் "இரியத் தேவரைக் கண்டனம்' 'என ஒற்று இரட்டிக்கப் பாடவேண்டியவர், சந்தவின்பத்தை வேண்டி, "இரிய தேவரைக் கண்டனம்" என்று ஒற்று இரட்டியாதாகப் பாடிச்சென்றார்.

6 "அடைத்த பேரணை அளித்தது நமக்குயிர் அழிவால்
உடைத்து போதுமால் அவர்தொட ராமலென் றுரைத்த
புடைத்து செல்குவர் விசும்பினும் என்றன போதோன்
படைத்த திக்கெலாம் பாய்ந்தனர் என்றதோர் பயத்தால்"

(மூலபலம்: 29)

என்னும் செய்யுளில் "உடைத்துப்போதுமால்" "புடைத்துச்செல்குவர்" என்று வரற்பாலனவற்றை ஒற்றிரட்டியாது வழங்கியுள்ளார். அன்றியும் இச்செய்யுளில் முதலடியின் ஐந்தாஞ்சீர், அழிவால் என்று பாடங்கொண்டு, "கடலை அடைக்குமாறு கட்டிய பெரிய அணையானது நமக்கு உயிரழிவை யுண்டாக்கிவிட்டது; ஆகையால்

நம்மை அந்த அரக்கர் தொடாதபடி அதனை உடைத்துப்போவோம்" என்று சிலவானரங்கள் கூறின, என்று உரைகாரரால் முதல் இரண்டடிகட்கும் பொருள் எழுதகப்பட்டுள்ளது. அவ்வாறு கொள்வதினும், "அழிவான்" என்று முந்தியபதிப்புகளிற்காணும் பாடமே கொண்டு, "நாம் அடைத்த பேரணையே நமக்கு உயிரை அளித்தது; அழிப்பான் அவர்தொடாமல் (பேரணையை) நாம்; உடைத்துப் போதுமால் என்று உரைத்த (சிலவானரங்கள்). என்று பொருள்கொள்வதும் சாலும். இப்பொருள் கொள்ளுமிடத்து அழிப்பான் என்று பானீறுகொடுத்துத் தொடர்தற்குக் காரணத்தைக் கூறவேண்டிய கம்பர், அரிய இலக்கணவழக்காக வானீறு கொடுத்து அழிவான்என்று வழங்கினர்என்ற உண்மையும் புலனும்.

இவ்வாறு பொருள்கொள்ளுமிடத்து, "அரக்கர் உயிரை வாங்குவதற்கு இலங்கை செல்வான் நாம் கட்டிய அணை, அவ்வரக்கரால் நாம்எல்லாம் ஒருங்கே உயிரிழவாதவாறு நம்மைக்காக்கவும் அமைந்தது" என்று அவை பரிந்து கூறிய சொல்லாகக் கருத்தமைதலும், அக்கருத்துத் தோன்றும்பொருட்டே, "பேரணை" என்ற பதப்பிரயோகம் வழங்கப்பட்டிருத்தலும் உணர்க.

இவ்வாறாகிய செய்யுள்விகாரங்களேயன்றி மற்றும் சிலவும் அவர் நூலிற் காணலாகும். அவற்றினையும் தருதும்.

7 "படைப்பெருங் குலத் தலைவரைக் கொணருதிர் என்பால்
இடைத்து நானவர்க் குற்றுள பொருளெலாம் இளத்தி
அடைத்த நல்லுரை விளம்பினன் அளவளா யமைவுற்
றுடைத்த பூசனை வரன்முறை யியற்றவென் றுரைத்தான்"

(படைக்காட்சி-30)

என்னும்செய்யுளில், உடையபூசனை" என்ன வேண்டியவர், எதுகைநயத்தின்பொருட்டு, "உடைத்தபூசனை" எனக்கூறினர். ஆயின் முதலடியில் மோனையுமில்லை. ஏனையடிகளில் எதுகையாயுள்ள இடைத்து, அடைத்த, உடைத்த என்பவற்றுக்குப் பொருத்தமான எதுகையுமில்லை!

8 "இராவணன் தன்னை வீட்டி இராமனாய் வந்து தோன்றித்
தரர்தல முழுதுங் காத்துத் தம்பியும் தானு மாகப்
பராபர மாகி நின்ற பண்பினைப் பகரு வார்கள்
நராபதி யாகிப் பின்னும் நம்மையும் வெல்லு வாரே"

(விடைகொடுத்த: 38)

என்னும் செய்யுளில் "நரபதி" என்னும் சொல்லை எதுகைநயத்துக்காக "நராபதி" என்று வழங்கியிருப்பதும் கம்பருடைய போக்கை இனிது காட்டும்.

9 "நவசெய் வன்றலை யிழந்ததம் அன்பரை நணுகி
அவச மெய்திட மடந்தையர் உருத்தெரிந் தறியார்
துவச மன்னதங் கூருகிர்ப் பெருங்குறி தோள்மேற்
கவச நீக்கினர் கண்டுகண் டாருயிர் அழிந்தார்"

(படைத்தலைவர்: 66)

என்னும் செய்யுளில், "நவஞ்செய்" எனவேண்டிய தொடரை எதுகைக்காக "நவசெய்" என்று வழங்கியுள்ளார்.

10 "இரந்தனன் எய்திய போதிசை யாது
கரந்தன னேல்கனி கொண்டு கடந்தென்
முரஞ்சினில் மேவி முயக்குவெ னென்று
விரைஞ் செதிர் வந்தனள் தீயினும் வெய்யாள்"

(அயோமுகி: 42)

என்னும் செய்யுளில், "முழைஞ்சு" என்னும் சொல்லை எதுகைக்காக, முரஞ்சு என்று வழங்கியுள்ளார்.

11 "தடிதட வத்தலை பலதழு வத்தாள்
கெடிதடை யக்குடர் கெழுமு நிணத்தாள்
படிதட வப்பல பாவ மிசைக்கும்
கடிதட வத்தினள் உருமு கறிப்பாள்"

(அயோமுகி: 46)

என்னும் செய்யுளில், "அத்தின் அகரம் அகரமுனையில்லை" என்றவிதிப்படி, 'கடிதடத்தினள்' என்று வழங்கவேண்டிய சொல்லைக் "கடிதடவத்தினள்" என்று சாரியை அகரத்தைக்கெடுக்காது புணர்த்துமுடித்து வழங்கியுள்ளார், யாப்பழியாமைப்பொருட்டால்!

12 "நின்ற வன்னிலை நோக்கிய நெடுந்தகை யிவனைக்
கோன்றல் உன்னிலன் வெறுங்கைநின் றானெனக் கொள்ளா
இன்ற விந்தது போலுமுன் தீமையென் றிசையோ
டொன்ற வந்தன வாசகம் இனையன உரைத்தான்"

(முதற்போர்: 251)

என்னும் செய்யுளில், எதுகைத்தொடை நயத்தின் பொருட்டுக் கொல் என்னும் வினைப்பகுதியடியாகக் கோன்றல் என்னும் தொழிற் பெயரை ஆக்கிக்கொண்டுள்ளார். கொல் என்னும் வினைப்பகுதியடியாகக் கொல்லுதல், கொல்லல், கோறல், கொல்லுகை, கொல்கை என்றின்னவாகிய தொழிற்பெயர்கள்தாம் சான்றோரால் வழங்கப் பட்டுள்ளன. கோன்றல் என்னும்தொழிற்பெயர் வழங்கப்பட்டிலது. கம்பர்தாம் அவ்வாறு வழங்கியுள்ளார்.

13 "சிந்தா ரத்தின் செச்சை யணிந்தாள் தெளிநூல்யாழ்
அந்தா ரத்தின் னேர்வரு சொல்லாள் அறைதும்பி
கந்தா ரத்தின் இன்னிசை பாடிக் களிகூரும்
மந்தா ரத்தின் மாலை யலம்பும் மகுடத்தாள்"

(ஊர்தேடு: 80)

என்னும் செய்யுளில், "காந்தாரம்" என்னும் சொல்லை எதுகை நயம் வேண்டிக் கந்தாரம் என்றே வழங்கினர்.

14 "சகரர் தம்பொருட் டருந்தவம் பெரும்பகல் தள்ளிப்
பகிரதன் கொணர்ந் திடுதலாற் பகிரதி யாகி
மகிதலத் திடைச் சன்னுவின் செவிவழி வரலால்
நிகரில் சானவி யெனப்பெயர் படைத்ததிந் நீத்தம்"

(அகலிகை: 61)

என்னும் செய்யுளில், பாகீரதி என்று வரற்பாலதாகிய தத்திதனைப் பகிரதி என்று வழங்கியுள்ளார். அன்றியும் எதுகையின் பொருட்டுப் பகீரதன் என்னும் பெயரைப் பகிரதன் என்றே வழங்கினர்.

15 "வந்தானைவணங் கியென்மன் னுயிர்தான்
எந்தாய் கொளஎண் ணினையேல் இதுதான்
உந்தா ரியதன் றுலகியா வுமுடன்
தந்தார் கொளநின் றதுதா னெனலும்"

(இரணியன் வதை: 118)

என்னும் செய்யுளில் "உந்தாரியது" என்னும் ஒருதொடருளது; திரு. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சார்யர் அவர்கள், இச்செய்யுளடிக்கு உரையெழுதுகையில், "உமது வசத்தில் உள்ளதன்றே" என்று எழுதிவிட்டுக் கீழேகாட்டிய விளக்க உரையில், "தாரியது" தரத்திலுள்ளது. அன்றி வழிப்பட்டது எனினுமாம்; தாரி-வழி, திசைச்சொல்; என்றும் எழுதினர்.

"உந்தாரியது" உந்த + அரியது என்ற இருசொல் ஒருசந்தியால் அவ்வாறாகியது எனக்கொள்ளாமல், உம் + தாரியது என்னும் இருசொல் ஒருசந்தியாக அவர்கள் கொள்ளுதற்குக் காரணம், உந்த + அரியது என்பன புணருங்கால், அவ்விருசொல்லும் தமிழ்ச்சொற்களாதலின் உயிர்முன் உயிர் உடம்படுமெய்பெற்றுப் புணருமுறைக்கேற்ப உந்தவரியது என்று முடிந்து வாராமையேயாம். அவை இரண்டும் வடசொற்களாய் அவ்வாறு முடிந்தனவேல் தீர்க்கசந்தியின்பாற்படும். அல்லதூஉம், அவற்றுள் ஒருசொல் வடமொழியாயினும், "ப + அந்தம் = பாந்தம்" என நன்னூலார் உடம்பொடு புணர்த்திக்கூறியதுகொண் டமைக்கப்படும்தகுதியுடையதாகும். அவ்விரண்டுமாகாமே, உந்த + அரியது என்னும் இரண்டுசொற்களும் தமிழ்ச்சொற்களான காரணத்தால் ஆசார்யர் அவர்கள், உம் என்றும், தாரியது என்றும் பிரித்துப் பொருள்கூறத் தலைப்பட்டார்கள். ஆனால், அவ்வாறு பிரித்துப்பொருள்கூறுமிடத்து மற்றோர் இலக்கணவழுவமைய இடமுளதாயிற்று. என்னை?

"............என் மன்னுயிர்தான்
எந்தாய் கொள எண்ணினையேல் இதுதான்
உந்தாரியதன்று"

என்புழி, "எந்தாய்! எண்ணினையேல் உந்தாரியதன்று" என்று வினைமுடிவாம். ஆகுமிடத்து, எந்தாய் என்பது ஒருமைவிளி; எண்ணினை என்பது முன்னிலை ஒருமைவினை; உம் தாரியது அன்று என்புழி உம் என்பது உருபேற்கநின்ற முன்னிலைப் பன்மைப்பெயர் என அமைந்து, ஒருமையும் பன்மையும் தடுமாறிவந்த பால்வழுவாகின்றதன்றோ? ஆகவே உம் தாரியதன்று என்று பிரிப்பதாகாது என்பது பெறப்படும்

படவே உந்தாரியது என்னும் தொடர், உந்த + அரியது என்னும் இருசொற்கள் புணர்ந்த முடிபுடைய ஒருதொடரே யென்பது சொல்லாமலே பெறுதும்.

ஈண்டு இரண்டுதமிழ்ச்சொற்களைப் புணர்க்கின்றவர் வடமொழிப் புணர்ச்சிபற்றி அவற்றை முடித்தது சந்தவின்பம் பயக்கும் எதுகைத் தொடை நயம்வேண்டியே யன்றோ?.

இனி, உந்த + அரியது = உந்தாரியது என முடிந்ததெனக் கொண்டு பொருளுரைக்குங்கால், "எந்தாய்! என்மன்னுயிர்கொள எண்ணினையேல் இது தான் உந்த அரியது; அன்று உலகுயாவும் தந் தார் கொளநின்றது" எனமுடிக்க. உந்துதல் = கெடுத்தல்.

இந்த "உந்தாரியது" என்பதன் பன்மையாகிய "உந்தாரிய" என் னும் தொடர்மொழியைக் கம்பர் பிறிதோர் இடத்தும் வழங்கி யுள்ளார்.

"சிந்தா குல மெந்தை திருத்திடுவான்
வந்தா னென என்னெதிரே மதியோய்
தந்தா யெனில் யானல தியார்தருவார்
உந்தாரிய வல்ல உயர்ந்த வெலாம்"

(அதிகாயன்வதை: 37)

என்னும் செய்யுளில் அதனைக்காணலாம். இச்செய்யுளுரையில் திரு. கோபாலகிருஷ்ணமாசார்யர் "உந்த + அரிய = உந்தாரிய" என்றே அமைத்துக் காட்டினர்.

கரன்வதைப்படலத்திலே,

"வந்தது சேனைவெள்ளம் வள்ளியோன் மருங்குமாய
பந்தமா வினையைமாளப் பற்றறு பெற்றியோர்க்கும்
உந்தருநிலையதாகி யுடனுறைந் துயிர்கள் தம்மை
அந்தகற் களிக்குநோய்போல் அரக்கிமுன் னாகவம்மா"

(கரன்வதை: 56)

என்னும் செய்யுளில் உந்த + அருநிலை = உந்தருநிலை என்று வழங்கி யுள்ளார். ஆதலின் உந்தாரியது என்பது அரிய இலக்கணமுடிபே.

16 "வரும் புண்டரம் வாளியின் மார்புருவிப்
பெரும் புண்டிற வாவகை பேருதிநீ
இரும் புண்டநீர் மீள்கினும் என்னுழையில்
கரும் புண்டசொல் மீள்கிலள் காணுதியால்"

(சடாயுவுயிர்நீத்த: 104)

என்னும் செய்யுளில் இரும்பு உண்ட நீர் எனற்பாலதைச் செய்யுட் சந்தப்பொலிவிற்காக நிர் என வழங்கினர். இது நாராயணனை நராயணன் என்று வழங்கியதுபோல்வது. ஈண்டு நிர் என்னும் குறுக்கல்விகாரம் யாப்பழியாமைப் பொருட்டுமன்று; எதுகைப் பொருட்டுமன்று; மற்று இன்னோசையின்பொருட்டுக் கொள்ளப் பட்டது.

இவ்வாறு யாப்பழியாமைப் பொருட்டாகவும், எதுகைத் தொடைநயத்துக்காகவும், இன்னோசைக்காகவும் செய்யுள் விகாரங் களை அமைத்துக்கொள்ளுதல், இலக்கணவரம்பைப் புறக்கணித் துச் செல்லுதல் ஆகாது. என்னை? தொல்காப்பியத்து, செய்யுள் விகாரங்கூறுகிற,

"அர்நாற் சொல்லும் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனர் புலவர்"

(தொல்: எச்ச: 7)

என்னும்சூத்திரத்து, நாட்டல்வலிய என்பது இவ்வறுவகை விகார மும் இன்னுழியாமென்று வரையறுக்கப்படா; செய்யுள் செய்யுஞ் சான்றோர் அணிபெற நாட்டலைத் தமக்கு வலியாக உடைய; என்ற வாறு" என்று சேனாவரையர் எழுதியிருப்பதனால் இவ்வகை விகா ரங்கள் இலக்கணவரம் பிகவாதனவேயாம்.

ஆயின், 2, 3, 4, 5, 6, 9, 11, 12 என்ற எண்ணின் கீழ்க் காட்டப்பட்டுள்ள விகாரங்கள், தொல்காப்பியர்கூறிய அறுவகைவிகா ரங்களுள் எவற்றின்பாற் படுவன என்பது விளங்கவில்லை. அவை இலக்கணவரம்பை மீறியனவாயுள்ளன!

இனி, அவற்றுக்காயினும், யாப்புநோக்கியும், எதுகைநோக்கி யும், இன்னோசைநோக்கியும் கொள்ளப்பட்டனவாதலின் அமைதி பெறுந்தன்மையுளவாம். மற்றுஞ்சிலவிடங்களில் அவ்வமைதி தானும் கூறுதற்கியலாதவகையிலே சொற்பிரயோகங்கள் கம்பரால் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுட்சில தருதும்.

17 "சோற்றும் தாமன்றிது சூழ்கழலாய்
பெற்றும் பெறுகில்லதோர் பெற்றியதே
மற்றென் பலசொல்லிவன் வந்துதவம்
முற்றும் பகல்தானுமுடித் தனனால்"
(சரபங்கர் பிறப்புநீங்கு: 19)

என்னும் செய்யுளில், சோல்லும் என்று வழங்கவேண்டியசொல்லைப் பின்வருஞ்சொற்களுக்கேற்ற எதுகையாதற்காகச் "சோற்றும்" என்று வழங்கினரேனும்,

18 "வாய்கொண்டு சோற்றற்கேற்ற வலிகொண்டு பலியுண் வாழ்க்கைப்
பேய்கொண்டு வெல்லவந்த பித்தனே மிடுக்கைப் பேணி
நோய்கொண்டு மருந்துசெய்யா ஒருவநின் னூன்மை யெல்லாம்
ஓய்கின்றாய் காண்டியென்னு உரைத்தனன் இடபன் ஒல்கான்"
(அதிகாயன் வதை: 232)

என்புழிச் "சோற்றல்" என்று வழங்குதற்கு ஒருஞாயமுமில்லை.

கோல் என்னும் வினைப்பகுதியடியாகக் கோன்றல் என்னும் தொழிற்பெயரை வழங்கினாற்போல ஈண்டுச் சோல் என்னும் வினைப்பகுதியடியாகச் சோற்றல் என்னும் தொழிற்பெயரைக் கம்பர் வழங்கியிருக்கிறார். அம்மட்டோ?

19 "ஒல்லும்படி நல்ல துனக்குதவச்
சொல்லும்படி யென்றவர் சோறலுமே
வெல்லும்படி நும்மை விளம்புமெனக்
கொல்லும்படி யாலரி கூறுதலும்"
(அதிகாயன் வதை: 72)

என்னும் செய்யுளில், சோறல் என்னும் தொழிற்பெயரை வழங்கியுள்ளார். கொல்என்னும் வினைப்பகுதியடியாகக் கோறல் என்னும் தொழிற்பெயர் வருதல்போலச் சொல்என்னும் வினைப்பகுதியடியாகச் சோறல் என்னும் தொழிற்பெயர் வருதலாகுமென்ற கருத்துப் போலும்! கோல் என்பதனடியாகக் கோன்றல் எனக் கம்பர் வழங்கியது போலச் சோல் என்பதனடியாகச் சோன்றல் என்னும் தொழிற்பெயரையும், சோல் என்பதனடியாகச் சோற்றல் என்னும் தொழிற்பெயரை வழங்கினாற்போலக் கோல் என்பதனடியாகக் கோற்றல் என்னும் தொழிற்பெயரையும் வழங்கியிருக்கிறாரா? என்பதும் ஆராயத்தகும்.

20 "கொடிய மாமுனி வெகுளியின் மடிந்தவெங் குரவர்
முடிய நீணிர யத்தினி லழுந்திடு முறைமை
கடியு மாறெனக் கருந்தவ மதற்குறு கருமம்
அடிகள் சொற்றுக என்றலும் அந்தணன் அறைவான்"

(அகலிகை: 45)

என்னும் செய்யுளில் "சொற்றுக" என்னும் வியங்கோள்முற்று வழங்கியுள்ளார்.

சொல் என்னும் வினைப்பகுதியடியாகச் சொல்லுக என்று வழங்கவேண்டிய வியங்கோள்முற்றை "சொற்றுக" என வழங்கியுள்ளார்.

இவ்வாறு வழங்கியுள்ளமுறைமையைச் சிறிதுஊன்றி நோக்குவோமாயின், சொல் என்பதனை வினைப்பகுதியாகக் கொள்ளாமே, சொற்று என்பதனையே இவர் பகுதியாகக் கொண்டிருக்கிறார் என்பது புலனாகின்றது.

சொற்று என்பது பகுதியாங்கால், "சொற்றும் தரமன்று" என்புழிப் பெயரெச்சமும், "சொற்றற்கேற்ற" என்புழித் தொழிற்பெயரும், "அடிகள் சொற்றுக" என்புழி வியங்கோள் முற்றும் வருதற்கு நெறிப்பாடுண்டேனும், 19-ம் எண்ணின்கீழ்க்காட்டிய செய்யுளில் வந்த "சோறலும்" என்னும் தொழிற்பெயர் வருதற்கு வழியில்லை. அன்றியும், சொல் என்னும் வினைப்பகுதியைச் சொற்று என்று கொண்டு வழங்கிய புலவர் கம்பர் ஒருவரே எனலாம்.

21 "விட்ட மாயினும் மாதினை வெஞ்சமம் விரும்பிப்
பட்ட வீரரைப் பெறுகிலம் பெறுவது பழிப்பால்
முட்டி மற்றவர் குலத்தொடு முடிக்குவ தல்லால்
கட்ட மத்தொழிற் செருத்தொழி லினிச்செயுங் கடமை"

(படைக்காட்சி: 50)

என்னும் செய்யுளில், "விட்டனம்" என்று வழங்கற்பாலதாகிய முற்றை "விட்டம்" என்று வழங்கியுள்ளார். இவ்வாறு வழங்கியது அறுவகைச் செய்யுள்விகாரங்களுள் ஒன்றினும் அமையாதாகும்.

"அம், ஆம், எம், ஏம் என்பன மூன்றுகாலமும்பற்றிவரும். உம்மொடுவரூஉம் கடதற எதிர்காலம்பற்றிவரும். முன்னின்ற நான்கிறும் (அம், ஆம், எம், ஏம்) இறந்தகாலம்பற்றிவருங்கால் அம்மும் எம்மும் கடதற என்னும் நான்கன்முன் அன்பெற்றுவரும்." (தொல்: வினை: 5) என்று ஆனைப்புலமைச் சேனவரையர் கூறியிருப்பது உணரத்தகும்.

22 "நான நெய்க்கன் குறைத்து நறும்புனல்
ஆன கோதற ஆட்டி யமுதொடும்
பான மூட்டிச் சயனம் பரப்பவும்
வான நாட்டியர் யாவரும் வந்தரால்"

என்னும்செய்யுளால், "வந்தனர்" என்று வழங்கவேண்டிய முற்றை "வந்தர்" என்று வழங்கியிருக்கின்றார். இவ்வாறு வழங்கியிருப்பது இலக்கணவழக்கொடு பொருந்துவதொன்றன்று.

"அன் னீற்றிற்குரிய காலவெழுத்து அர் ஈற்றிற்கும் ஆனீற்றுக்குரிய காலவெழுத்து ஆரீற்றுக்கும் உரிய" (தொல்: வினை: 9) என்றார் சேனவரையர். அன்னீற்றுக்குரிய காலவெழுத்தைக் கூறுமிடத்து,

"காலத்துக்கேற்ற எழுத்துப்பெறுங்கால், அன்னும், அள்ளும் அம்மீற்றோடும், ஆனும் ஆளும் ஆமீற்றோடும் ஒக்கும்" என்றார்.

அம்மீற்றுக்குரிய காலவெழுத்துக் கூறுமிடத்தே, "அம்மும் எம்மும் கடதற என்னும் நான்கன் முன் அன்பெற்றுவரும்" என்றார்.

எனவே வந்தர் என்பதில் உள்ள அர் ஈறு தகரத்தின்முன் இறந்தகாலம்பற்றிவருங்கால் தனக்குரிய காலவெழுத்தாகிய அன் பெற்று வருதல்வேண்டும் என்றாகிறது. அதன்படி வருமிடத்து, வந்தனர் என்று வருதலே வழுவன்றாம். வந்தர்என வருதல் "இலக்கண மருங்கிற் சொல்லாறன்றெ"னவே கொள்ளப்படும்.

126 எளியாரை யலக்கழித்தால்—தெய்வத்துக்
கேற்குமோ அதுக்கது கேட்குமல்லோ
கள்வர்கள் இதையறிந்தார்—என்னுடைய
கைப்பொருளையுங்கொண்டு தப்பிவிட்டார்

127 பேச்சுமூச் சில்லாமல்—அங்கே
பிணமாய்க் கிடந்தஎனக் குணர்வுவர
ஈச்சுர யோகிவந்தார்—என்னைக்கண்
டெழுப்பிவிட் டாருயிர் பிழைத்தெழுந்தேன்

128 திருட்டினிப் போதுமென்றே—அவரிணைச்
சேவடிக் காளாகி யேவல்செய்தேன்
அருட்கொரு பாத்திரமாய்ப்—பெருமையில்
ஆழ்ந்தவ ரிடத்திலே வாழ்ந்திருந்தேன்

தந்தானத்தானனை.

விருத்தம்.

சு குருவடியா னெனக்கொடுநா ளிருக்குநாளில்
குளிர்மலையா ளத்தரசன் குலங்களோடும்
கருவடிவச் சேதுவுக்கு வந்தவாறும்
கனசேது பதியுடனே கலந்தவாறும்
திருவடிராச் சியத்திருந்து யான்வந்தங்கே
திருடினதும் காலொடுகை சிதைந்தவாறும்
தருவடியிற் புல்லாணி மாயன்என்னைத்
தடுத்தாட்கொண் டருளினதும் சாற்றுவேனே.

சு. குரு அடியான் எனக்கொடு - ஆசிரியனாகிய ஈச்சுரயோகியென்பவரால் அடியவன்என்று கொள்ளப்பட்டு. கருவடிவம் - கரியநிறம். திருவடிராச்சியம் - மலையாளம். அங்கே - சேதுநாட்டில். காலொடுகை - காலும் கையும். தரு - திருவரசு. புல்லாணி - சேதுநாட்டுள்ள திருமால் தலங்களுள் ஒன்று.

தரு.

129 பொன்னர சடிதனிலே—தென்திருப்
புல்லாணி வாழ்நித்ய கல்யாணி
கன்னிபதுமாசனிசேர்—தெய்வச்சிலைக்
கடவுள் பெரியதிரு வடிபுரக்கும்

130 திருவடி ராச்சியத்திற்—சிலநாள்
தீதுவிட் டாஷாட பூதியைப்போல்
குருவுக்குப் பணிகள்செய்து—நானு
கூலத்திலே யிருக்கும் காலத்திலே

131 கேரள நாட்டரசன்—ராமகதை
கேட்டதிற் போர்க்குக்கை தீட்டிச்சென்றோன்
நாரண னடியவர்க்காய்ச்—சபைதனில்
நான்பிணை யென்றுகுடப் பாம்பையெடுத்தோன்

132 குலசேகரப்பெருமான்—சந்த்ர
குலந்தழைத் திடவந்து நலந்தழைத்தோன்
மலிபுகழ் வஞ்சிநாடன்—புகழ்சேர
மான்பெருமாள்பால மார்த்தாண்டன்

---

129. தென் - அழகு.

130. ஆஷாடபூதி - நல்லோன்போல் நடிக்கும் தீயோன்.

131. கேரளநாடு - மலையாளம். 'ராமகதை கேட்டதிற் போர்க்குக் கைதீட்டிச் சென்றோன்' என்றது குலசேகராழ்வார் இராமகதை கேட்டு வருங்கால், இராமன் கரன்முதலிய அரக்கர் பதினாலாயிரவரோடு தான் ஒருவனே நின்று போர்புரிந்தசெய்தியைப் பௌராணிகர் விரித்துரைக்கக் கேட்டு குலசேகரர் பத்திமிகுதியால் அது கதையென்பதை மறந்து மெய் யாக அதுபொழுது நிகழும் செய்தியாகக்கொண்டு இராமனுக்குத் துணையா கும்பொருட்டுப் படையுடன்புறப்பட்ட விருத்தாந்தத்தைக் குறித்துநின்றது. பின்கூறியதும் குலசேகரர் வைபவமே.

133 படர்கொல்லி காவலவன்—அநந்த
பத்மநாபதாசன் உத்தம வான்
குடையொன்றில் ராச்சியத்தை—அடக்கிச்செங்
கோலிற் செலுத்திவரும் காலத்திலே

134 புண்ணியம் அனைத்துமொன்ருய்த்—திரண்டொரு
புண்ணியம் தேடுதற் கெண்ணிஞற்போல்
எண்ணினன் இன்குடையான்—தனுக்கோடி
எறிகடலாடவே நினைவு கொண்டான்

135 சதுரங்க தளத்துடனே—ப்ரதானிகள்
தளகர்த்தர் மந்திரிகள் கிளையுடனே
பதினெட்டு வாத்தியமும்—முழங்கிடப்
படைத்தலை வர்கள்சூழப் பயணங்கொண்டான்

136 போமதைக் கண்டுடனே—தானங்கள்
பூரிகள் வாங்கப் புரோகிதர்கள்
நேமங்கொண் டெழுந்தார்கள்—நெற்றிக்கு
நேரேமுன் குடுமியொ ரோரம்தொங்க

137 தடிக்கம்பு குடையுங்கொண்டு—கோணியில்
சரக்குச்சுமையும் வாயில் பாக்குங்கொண்டு
இடைக்குக்கீழ் முண்டுடுத்திக்—கச்சடமிட்
டிருதுடை யுந்தெரியச் சொருகிக்கொண்டு

131.—133 கண்ணிகளில் மலையாளநாட்டரசனுகிய அநந்தபன்மநாபதாசன்பெருமை பேசப்படுகிறது. குலசேகரர் முதலிய முன்னேர் செயல்களும் கவிமரபுபற்றி இங்கே அநந்தபன்மநாபதாசன் செயல்களாகக் கூறப்பட்டுள்ளன.

134. தனுக்கோடி எறிகடல் - தனுக்கோடியாகிய அலைமோதுகின்ற கடல்.

135. சதுரங்க தளம் - இரதம், யானை, குதிரை, காலாள் என்னும் நால்வகையுறுப்புக்களையுடைய படை. பிரதானி - தளங்களும் ராச்சியமும் திட்டமிட்டமைப்போன்.

136. பூரி - தக்கிணை.

138 எவடேயெந்தாணு மென்று—பேசிக்கொண்
டின்புற நம்புரியர் கும்புவரவே
தவலேயும் தாலிச்செம்பும்—தாவளியில்
தக்கையிட்ட மடிசஞ்சி தருப்பைகொண்டு

139 கம்பளி யுடுத்திக்கொண்டு—வேதங்கள்
கற்றவவ தானிகள் மெத்தவர
தெம்பதி தம்முடனே—சாஸ்திரிகள்
தீக்ஷிதர் கூட்டங்கள் திரண்டுவர

140 விருதுள்ள பாளையங்கள்—தோவாளே
வெளியி லிறங்கிநெல் வேலியில்வந்தார்
அரசனைக் காணவென்றே—எங்கள்குரு
வானவர் சென்றுருடன் யானுஞ்சென்றேன்

141 குருமுனி வரவுகண்டு—ராசனெதிர்
கொண்டுவந் தழைத்துத்தன் அண்டையில்வைத்து
அருமைகொண் டுபசரித்துக்—கூடவர
லாகுமென் றீசுவர யோகிக்கங்கே

142 சிவிகையும் தீவட்டியும்—கூடாரத்
திரையும் கொடுத்துக்கூட வருகவென்றான்
குவலயத் தோர்நடுங்க—விஷத்தைக்
கொடுக்கும் பாம்புக்குப்பால் கொடுப்பதுபோல்

---

138. எவடே எந்தாணும் என்பது நம்பூரிகள் பேச்சு. தாலிச்செம்பு - ஸ்தாலீபாகம் செய்வதற்குரியசெம்பு. தாவளி - (வெள்ளைக்) கம்பளி. தக்கையிட்ட - ஒட்டுப்போட்டுத் தைத்த.

139. தெம்பதி - கணவனும் மனைவியும்.

140. தோவாளைவெளி-மலையாளநாட்டுக்கும் தென்தமிழ்நாட்டுக்கும் இடையேயுள்ள எல்லைவெளி. குருவானவர் - ஈச்சுரயோகி.

141. குருமுனி - குருவாகிய முனி=ஈச்சுரயோகி. ராசன் - அநந்த பத்மநாபதாசனாகிய மலையாளநாட்டரசன்.

143 எனக்கொரு குதிரைதந்து—நிலையங்கி
இடைக்கட்டுத் தலைப்பாகு கடுக்கன்கண்டி
கனத்தகை வளையும்தந்து—யோகியர்
காரியத் தானுபதிரீர் காணுமென்றார்

144 தானு பதியாகி—யோகியர்
தம்மோடு வந்தேனந் நாண்முதலாய்
யானொரு துரையானேன்—யாவரும்
எனைவந் தனுசரிக்க முனைபடைத்தேன்

145 அதிட்டம் ஒருத்தன்பங்கோ—இவ்வள
வடிகண்ட பின்புசும்மா விடுவேனோ
முதற்கக்ஷி யாயிருந்தேன்—எனக்கங்கே
முத்துமழை பொழிந்ததோர் மூன்றுநாழிகை

146 எவ்வேளை போனாலும்—ராசனுட
ஏகாந்தத் திலுந்தடை யெனக்கில்லையே
இவ்வாறு செய்தென்னையும்—விரைக்கோட்டைக்
கெலியெனக் கூட்டிக்கொண் டெழுந்தானே

147 பெருகுநெல் வேலிக்கிப்பால்—சிவலப்
பேரிவிட் டோட்டைப் பிடாரத்தில்வந்து
முருகவிழ் வேடநத்தம்—வைப்பாறு
முதலியார் மடஞ்சாயற் குடிகடந்து

148 கடுகுசந் தையுங்கடந்து—கொத்தங்குளம்
கடந்து சிக்கலுக்கிப்பால் நடந்துவந்து

---

143. நிலையங்கி - நெட்டங்கி. இடைக்கட்டு - இடைவார். கண்டி- கழுத்தணி.

144. அநுசரிக்க - பின்பற்றிவர. முனைபடைத்தேன் - பெருமை யடைந்தேன்.

146. இங்கே ராசனென்றது அநந்தபத்மநாபதாசனை.

147—148. கண்ணிகளில் திருநெல்வேலியிலிருந்து திருப்புல்லாணிக்குச் செல்லும்வழி கூறப்படுகிறது. சிவலப்பேரி, ஓட்டப்பிடாரம், வேடநத்தம், வைப்பாறு, முதலியார்மடம், சாயல்குடி, கடுகுசந்தை, கொத்

தடமதில் சிகரிகைசூழ்—புல்லாணி
தனில்வந்து ஸேதுவிற் புனலாடிச்

149 சக்கரப் புனலாடி—நடைவைத்துத்
தர்ப்பசய னம்பரவி யப்புறஞ்சென்று
மைக்கூண்டு தோணித்துறை—தனில்வந்து
வாய்த்ததோ ணியிற்பாம்ப னுற்றைக்கடந்து

150 இராமீசர் பதம்பணிந்து—தனுக்கோடி
நாடிச்சென் றங்குபுன லாடிக்கொண்டு
தாமதம் செய்யாமல்—அங்கேசெய்யும்
தருமம் செய்துதிரும்பி வருகையிலே

151 தனுக்கோடி யாடினவர்—சேதுபதி
தனைக்காண வேணுமென்றே மனதிலெண்ணி
மனுக்கோடி சூழ்ந்திருக்கும்—புல்லாணி
மார்க்கத்தி லேயந்த வூர்க்கருகே

152 பாளையம் வருகையிலே—முகவைப்
பதிராசன் சேது பதிராசன்
காளை முகிற்கிளையான்—தண்டுவார்
கண்டன் சாமித்துரோகி வெண்டயத்தான்

தங்குளம், சிக்கல் என்பவை திருநெல்வேலியிலிருந்து திருப்புல்லாணிக்குச் செல்லும் வழியிலுள்ள ஊர்கள். சிகரிகை - கோபுரம்.

149 சக்கரப்புனல் - திருப்புல்லைத்தலத்துள்ள சக்கரதீர்த்தம். நடைவைத்து - நடந்து. மைக்கூண்டு, தோணித்துறையென்பன திருப்புல்லாணிக்கும் இரேமேச்சுரத்துக்கும் இடையிலுள்ளவை.

151. சேதுகாவலராதலின் தனுக்கோடியாடினவர் சேதுபதிகளைக் காண்பது மரபாயிற்று. மனுக்கோடி - மக்கட்கூட்டம். மார்க்கம் - வழி.

152. பாளையம் - அநந்தபத்மநாபதாசனுடைய சதுரங்கசைனியம். முகவைப்பதி - இராமநாதபுரம்.

152—156. அநந்தபத்மநாபதாசனை எதிர்கொண்டழைக்குஞ் சேதுவேந்தன்பெருமை. தண்டுவார்கண்டன், சாமித்துரோகிவெண்டயத்தான்,

153 இரணிய கெர்ப்பயாஜி—பானையப்பட்
டெழுபத் திருமகிபர் தொழும்பாதன்
பருதி குலாதிபதி—சனங்களுக்குப்
பாம்பன் துறைகடத்திப் பாதைவிடுத்தோன்

154 தெண்டிரைப் பலன்கொடுத்துத்—தன்னுடைய
தெரிசன முங்கொடுக்கும் சேதுபதி
தொண்டியந் துறையுடையான்—இராகவன்
சொற்கொண்டு சேதுவா திக்கம்பெற்றோன்

155 தடமுற்ற செம்பிநாடன்—காவிக்குடை
சகசம்புக் குடைமன்னன் தாலிக்குவேலி
குடைமேற் சில்லிவிருதும்—அநுமக்
கொடிவிருதும் கருடக் கொடிவிருதும்

156 நாலங்க முள்ளபடையும்—திரண்டந்த
ராசனுக் கெதிர்வந்து நாடினனே
ஓலஞ்செய் வாத்தியத்தால்—அண்டமுக
டுடையத் திசைகளெங்கும் கிடுகிடெனக்

157 கட்டிய ஒலிமுழங்க—இருவரும்
கடலொடு கடல்வந்து கலந்தாற்போல்
கிட்டினர் சமபேட்டி—அதுக்கெல்லாம்
கெடனை யொருவன்செய்தேன் அடிமுதலாய்

இரணியகெர்ப்பயாஜி, தாலிக்குவேலி என்பவை சேதுவேந்தர்க்குரிய விருதுகள்.

154. தெண்டிரைப்பலன் - தெளிந்த அலைகளையுடைய சேதுதீர்த்தத்தில் நீராடிய பலன். சேது ஆதிக்கம் சேதுவை ஆளும் தலைமை.

155. செம்பிநாடு என்பது சேதுநாட்டுக்குரிய மற்றொருபெயர்.

156. நாலங்கம் - இரதம் கரி, பரி, தேர் என்னும் உறுப்பு. அந்த ராசன் என்றது அநந்தபத்மநாபதாசனை. ஓலம் - முழக்கம்.

157. கட்டிய ஒலி-விருதுகளின் முழக்கம். இருவரும் - சேதுபதியும் மலையாளநாட்டரசனும். . கெடனை - முயற்சி. சமபேட்டி - இரண்டரசரில் உயர்வு தாழ்வின்றி இருவரும் ஒருவரையொருவர்சென்று காண்டல். அடிமுதலாய் - தொடக்கம் முதல்.

158 தானுப திக்கத்திலே—அவருக்கும்
தங்கக்கட்டி யிவருக்கும் சிங்கக்குட்டியாய்
நானுக எங்கும்நின் று—நடந்த
நடத்தையிலேயவரென் னிடத்திலன்பாய்

159 மன்னவன் சேதுபதி—தன்னரண்
மனையிற்சென் றங்கென்னை வரவழைத்துத்
தன்னெதிர் இருக்கச்சொல்லி—உமக்கென்றும்
தானு பதியுத்யோகம் தானேவென்றார்

160 உள்ளதைச் சொல்லுவேனோ—பொய்க்கடற்
குள்ளொரு துளிகொண்டு விள்ளலுற்றேன்
பிள்ளைமார் நாங்களென்றேன்—தளகர்த்தர்
பிரபலர் தானெங்கள் பெரியோரென்றேன்

161 கெருவமும் பணக்கொழுப்பும்—வந்ததைக் [டேன்
கெடுத்துக்கொண்டார் நானிப்போ தடுத்துக்கொண்
நிருவாகி யென்றறிந்து—எனக்கந்த
நிருபன் சேனுதிபத்தியம் தருவனென்றான்

162 இருக்கிறேன் என்றுசொன்னேன்—இப்படி
இருக்கையிலேநடந்த திருக்கைக்கேளும்
பெருத்ததோர் சனிபகவான்—எனைவந்து
பிடித்தார் பிடித்ததெப் படித்தானென்றால்

---

158. தானுபதிக்கம் - தானுபதிகளுக்குரியசெயல். அவர் என்றது மலையாளநாட்டரசனை. இவர் என்றது சேதுவேந்தரை. தங்கக்கட்டி சிங்கக்குட்டி என்பவை நாட்டுவழக்கு. நல்லகுணஞ்செயல்களுடையவரைத் தங்கக்கட்டியென்பர். வீரச்செயலால் மேம்பட்டாரைச் சிங்கக்குட்டியென்பர். அவர் என்றது சேதுபதியை.

160—161. சேதுவேந்தரிடம் ஈச்சுரயோகியார்தானுபதி தன் முன்னோர் பெருமைகூறுதல்.

160. விள்ளலுற்றேன்-சொன்னேன். பிரபலர்-பிரஸித்திபெற்றோர்.

161. அந்த நிருபன் - சேதுவேந்தன்.

162. திருக்கு - தவறு.

163 திண்சோழ நாட்டரசன்—எழெட்டுச்
சிறைவளர்த் தபிநய முறைவருத்திச்
சங்கீத மும்வருத்தி—நாடக
சாலையில் நாட்டியக் கலைவருத்தி

164 ஆடைகள் பணிகள்செம்பொன்—தனித்தனி
ஆயிர மாயிரம் அவர்க்குதவிக்
கோடிபேர் காவல்வைத்து—இராமீசர்
கோவிலுக்கு நேர்ந்து கொண்டதென்ன

165 இவிடத்துக் கனுப்பிவைத்தான்—கூடவந்த
எஜமானன் சொல்லவந்த நிஜமறிந்து
தவமிக்க சேதுமன்னன்—அத்தனை
தளங்கட்கும் நல்லதா வளங்கற்பித்து

166 விடுதிவிட் டிருக்கச்சொல்லி—இராமலிங்க
விலாசத் தழைத்துச்சல் லாபத்துடன்
நடனங்கள் பார்க்கலுற்றான்—அப்போது
நானு மிருந்தேனந்த நடுச்சபையில்

167 கண்டேன் தாசிகளை—ஓடிப்போய்க்
கட்டிக்கொள்ள நினைத்ததென் கெட்டமனது
பெண்டாசை பொல்லாதே—என்னையந்தப்
பேய்பிடித்தது புத்தி போய்மடித்தது

---

163. சிறை - பாதுகாப்பில் வளர்க்கப்படும் பெண்ணினம்.

164. பணிகள் - அணிகலன்கள்.

165. இவிடத்துக்கு - இவ்விடத்துக்கு - முகவை நகரத்துக்கு, எஜமான் தலைக்கோலாசான். நிஜம் - உண்மை. தளங்கட்கும் - கூட்டங்களுக்கும். தாவளம் - வசதி.

166. விடுதி - தங்குமிடம். இராமலிங்கவிலாசம் - சேதுவேந்தர் அரண்மனையிலுள்ள கொலுமண்டம். சல்லாபத்துடன்-அளவளாவுதலுடன்.

168 தலைக்கட்டி வருகையிலே—என்னுடைய
தலைக்கட்டி வரும்படி கலக்கங்கொண்டு
உலைக்கிட்ட மெழுகானேன்—அவர்களில்
ஒருத்தியை நெருக்கோடே நெருக்காகத்

169 தூதுவிட் டளப்பறிந்தேன்—அவளொரு
திரும்பாகக் கூடவெனை விரும்பவில்லை
காதலும் விடவில்லை—களவிலே
கைவைப்போ மென்றதிலே கருத்தைவைத்தேன்

170 குருக்கட்கு நாமம்வைக்கும்—புத்தியென்னைக்
கொன்றாலும் விடுமோ பெண்டாசையால்
கருக்கடை யெடுத்துச்செய்து—காவலர்
கைத்திறமும் நந்திறமும் காண்போமென்றால்

171 இவளவு செய்யும்போது—இங்கிருக்க
லாகாதே வெளியேறப் போகாதே
கெவுரவம் போய்விடுமே—வீணிலே
கேவலம் ஆசைப்பட் டாவதென்ன

172 கொம்புத்தேன் கண்டமுடவன்—கொண்டபெருங்
கொட்டாவி யிதுநமக் கெட்டாதென்றே
பென்புத்தி தேறிக்கொண்டு—வந்துவிட்டேன்
எவர்களும் கொலுமுடிந் தேகியபின்

173 மன்மதன் இங்கேவந்தான்—வந்துசண்டை
மாட்டினன் காமத்தீயை மூட்டினனே
துன்மதி யெனைவிடுமோ—ஏற்கெனவே
தூர்த்தர்க்கெல் லாமுதற் பாத்திரம்நான்

---

168. தலைக்கட்டிவருகையில்- (இவ்வாறு யான் சேனைபதிக்குரிய பணிகளை) நிறைவேற்றி வருகையில்; என்னுடைய தலைக்கு அட்டிவரும்படி என்று பிரித்துப்பொருள்கொள்க. அட்டி - கேடு. உலைக்கு - உலையில்.

170. கருக்கடை — கள்வர்க்குரிய கருவிகளில் ஒன்று.

171. இவளவு - இவ்வளவு.

173. துன்மதி - கெட்டபுத்தி. ஏற்கெனவே - முன்னமே. தூர்த்தர் - விடபுருடர்.

174 காமன்வந் தடிக்கையிலே—நீதியும்
கருமமும் தருமமும் கருதுவேனே
தீமைசெய் தறியேனே—எனக்கங்கே
தேவேது குருவேது பாவமேது

175 பசிக்குப் பனங்காய்தின்றால்—பித்தம்பட்ட
பாட்டைப்படு தென்றுகை நீட்டிக்கொண்டேன்
நிசிப்பொழு தகலுமுன்னே—செய்தாலல்லோ
நெய்வேத்தியங் கொள்ளுங்காம தெய்வமென்று

176 புலப்பங்கள் பெரிதாகிக்—கூத்துப்பார்க்கப்
போன இடத்திற்பேய் பிடித்தாற்போல்
கலக்கங்கொண் டெழுந்திருந்தேன்— அந்தப்பெண்ணைக்
களவிற் கொண்டுவரவோர் உளவெண்ணினேன்

177 ஏகாந்தத் தலத்தில்வந்தேன்—மழைக்கால்
இருட்டுமவ் வேளைவந்த தெனைக்கெடுக்க
மோகாந்த காரத்திலே—முழுகிப்போய்
மூலிகை நரிக்கொம்பு முதலெடாமல்

178 குளிகங்கள் சொக்குப்பொடிகள்—அஞ்சனங்கள்
கூட்டுந் திலதமும்கைக் கொள்ளாமல்
முளைகருகிய பயிர்போல்—கேடுவரும்
முன்னேமதி கெட்டதெனக் கங்கோரத்தில்

179 ஆகாத காலம்என்னைப்—பிடரிதொட்
டழுந்தப் பிடித்துத்தள்ள எழுந்துசென்றேன்
போகாதே என்று சொல்லி—ஒருகரும்
பூனை தடுத்ததிலும் ஞானமற்றேன்

---

174. தே ஏது - தெய்வம் ஏது?

176. உளவு - உபாயம்.

177. ஏகாந்தத்தலம் - தனியிடம். மோகாந்தகாரம் - ஆசையாகிய இருட்டு.

177—178. மூலிகை, நரிக்கொம்பு, குளிகம், சொக்குப்பொடி, அஞ்சனம், திலதம் என்பவை கள்வர்கொள்ளும் சாதனங்கள்.

168 தலைக்கட்டி வருகையிலே—என்னுடைய
தலைக்கட்டி வரும்படி கலக்கங்கொண்டு
உலைக்கிட்ட மெழுகானேன்—அவர்களில்
ஒருத்தியை நெருக்கோடே நெருக்காகத்

169 தூதுவிட் டளப்பறிந்தேன்—அவளொரு
துரும்பாகக் கூடவென்னை விரும்பவில்லை
காதலும் விடவில்லை—களவிலே
கைவைப்போ மென்றதிலே கருத்தைவைத்தேன்

170 குருக்கட்கு நாமம்வைக்கும்—புத்தியென்னைக்
கொன்றாலும் விடுமோ பெண்டாசையால்
கருக்கடை யெடுத்துச்செய்து—காவலர்
கைத்திறமும் நத்திறமும் காண்போமென்றால்

171 இவளவு செய்யும்போது—இங்கிருக்க
லாகாதே வெளியேறப் போகாதே
கெவுரவம் போய்விடுமே—வீணிலே
கேவலம் ஆசைப்பட் டாவதென்ன

172 கொம்புத்தேன் கண்டமுடவன்—கொண்டபெருங்
கொட்டாவி யிதுநமக் கெட்டாதென்றே
யென்புத்தி தேறிக்கொண்டு—வந்துவிட்டேன்
எவர்களுங் கொலுமுடிந் தேகியபின்

173 மன்மதன் இங்கேவந்தான்—வந்துசண்டை
மாட்டினான் காமத்தீயை மூட்டினனே
துன்மதி யென்னைவிடுமோ—ஏற்கெனவே
தூர்த்தர்க்கெல் லாமுதற் பாத்திரம்நான்

---

168. தலைக்கட்டிவருகையில்- (இவ்வாறு யான் சேனாபதிக்குரிய பணிகளை) நிறைவேற்றி வருகையில்; என்னுடைய தலைக்கு அட்டிவரும்படி என்று பிரித்துப்பொருள்கொள்க. அட்டி - கேடு. உலைக்கு – உலையில்.

170. கருக்கடை – கள்வர்க்குரிய கருவிகளில் ஒன்று.

171. இவளவு - இவ்வளவு.

173. துன்மதி - கெட்டபுத்தி. ஏற்கெனவே - முன்னமே. தூர்த்தர் - விடபுருடர்.

174 காமன்வர் தடிக்கையிலே—நீதியும்
கருமமும் தருமமும் கருதுவேனே
தீமைசெய் தறியேனே—எனக்கங்கே
தேவேது குருவேது பாவமேது

175 பசிக்குப் பனங்காய்தின்றால்—பித்தம்பட்ட
பாட்டைப்படு தென்றுகை தீட்டிக்கொண்டேன்
நிசிப்பொழு தகலுமுன்னே—செய்தாலல்லோ
நெய்வேத்தியங் கொள்ளுங்காம தெய்வமென்று

176 புலப்பங்கள் பெரிதாகிக்—கூத்துப்பார்க்கப்
போன இடத்திற்பேய் பிடித்தாற்போல்
கலக்கங்கொண் டெழுந்திருந்தேன்—அந்தப்பெண்ணைக்
களவிற் கொண்டுவரவோர் உளவெண்ணினேன்

177 ஏகாந்தத் தலத்தில்வந்தேன்—மழைக்கால்
இருட்டுமவ் வேளைவந்த தெனைக்கெடுக்க
மோகாந்த காரத்திலே—முழுகிப்போய்
மூலிகை நரிக்கொம்பு முதலெடாமல்

178 குளிகங்கள் சொக்குப்பொடிகள்—அஞ்சனங்கள்
கூட்டுந் திலதமும்கைக் கொள்ளாமல்
முளைகருகிய பயிர்போல்—கேடுவரும்
முன்னேமதி கெட்டதெனக் கங்கோரத்தில்

179 ஆகாத காலம்என்னைப்—பிடரிதொட்
டழுந்தப் பிடித்துத்தள்ள எழுந்துசென்றேன்
போகாதே என்று சொல்லி—ஒருகரும்
பூனை தடுத்ததிலும் ஞானமற்றேன்

---

174. தே ஏது - தெய்வம் ஏது?

176. உளவு - உபாயம்.

177. ஏகாந்தத்தலம் - தனியிடம். மோகாந்தகாரம் - ஆசையாகிய இருட்டு.

177—178. மூலிகை, நரிக்கொம்பு, குளிகம், சொக்குப்பொடி, அஞ்சனம், திலதம் என்பவை கள்வர்கொள்ளும் சாதனங்கள்.

180 நிழலென வளைந்துசென்றேன்—காவலர்
நெருக்குமங் கேசனப் பெருக்குங்கண்டேன்
குழிநரி போற்பதுங்கி—ஆரற்சுவர்க்
கொல்லைக்குள் ளேயொரு வில்வக்கொம்பு

181 மறுபுறம் தெரியக்கண்டேன்—உடுத்திய
வத்திர மெடுத்ததிற் ரூத்தவெறிந்தேன்
எறிகையில் மகிழ்ச்சியினால்—உடல்தன்னால்
எழும்பிற்றப் பந்தடித்துக் கிளம்பினாற்போல்

182 அப்புறத் திறங்கிவிட்டேன்—எனக்கங்கே
அவள்பெரிதோ அந்தச் சுவர்பெரிதோ
இப்படிப் பெண்கிடைத்தால்—எட்டுமலை
என்றாலும் தாண்டுவ தெனக்கரிதோ

183 பொருப்பெனும் மனத்திரத்தால்—வல்லவற்குப்
புல்லுமா யுதமென்று சொல்லுவதுபோல்
வரிப்புலிக் கூட்டத்திலே—சிறிதொரு
மான்குட்டி சென்றதெனநான்கிட்டினேன்

184 கூடமும் திண்ணைகளும்—சவுக்கையும்
கொட்டகையும் மேல்வீடும் முற்றவெளியும்
நாடக சாலைகளும்—சுற்றிச்சுற்றி
நலியாமல் தேடியங்கே பலியாமல்

185 பாடக சாலையிலே—அங்கொரு
படுக்கையி லேபெண்கள் அடுக்கடுக்காய்
எட்டுப்பேர் தாசிகளும்—உறங்கினார்
எல்லார்க்கும் நடுவிலே யவளைக்கண்டேன்

186 புதையல்கண் டவர்போலக்—கண்டுடல்
பூரித்து நின்றேனந்த நேரத்திலே
இதயம் பதறலுற்றது—தோளுங்கண்ணும்
இடந் துடித்ததையும் எண்ணாமல்

---

180. ஆரற்சுவர் - சமையற்கட்டுச்சுவர். வத்திரம் - உடை.

183. பொருப்பு - மலை. மனத்திரத்தால் - அசையாத மனத்தினால்.

187 அங்கிருந்த விளக்கணைத்தேன்—அவளுக்கோர்
அயர்ச்சியைக் கொடுத்தந்த முயற்சியிலே
கங்கணம் குலுங்காமல்—தோழியர்
கைகளை யெடுத்தப்பாற் பையவைத்துத்

188 துடைக்குள்ளே யொருகையும்—அவளுடைய
தோளிலே ஒருகையும் நீள்விடுத்து
இடைக்கொடி துவளாமல்—அவளைக்கை
இரண்டிலும் எடுத்துக்கொண் டிப்பால்வந்தேன்

189 கொங்கைகள் கொஞ்சச்சுமையோ—நிதம்பங்கள்
குன்றமல்ல வோகுழல் கொண்டலல்லவோ
அங்கதைச் சுமக்கப்போமோ—மோகத்தி
னாலெனக்கு நெட்டிப்பொம்மை போலிருந்தது

190 சித்தெனும் ராமீசர்—சிறைகளைத்
தீவினை யான்செய்த பாவம்வந்து
பத்தடி நடக்குமுன்னே—இருகண்ணும்
பட்டுக்கட்டி னாற்போலாச்சுத் தட்டுக்கெட்டங்கே

191 வேட்டைநாய் தனைமிதித்தேன்—வள்ளென்று
விழுந்து பிடுங்கிற்றென்றன் முழங்காலிலே
ஆட்டுடற் கறிபோலே—விலையிட்டால்
அரைப்பணக் கறியுண்டு சரித்திட்டதே

192 நரிக்குரல் கடலைமுட்டும்—அதுபோல
நாய்க்குரல் ஒருசற்றுக் கேட்குமுன்னே
இருக்கிற நாய்களெல்லாம்—குலைத்த
இரைச்சலைக் கேட்டெழுந் திருச்சுவிட்டார்

---

187. இதயம் - மனம். ஆடவர்க்கு இடக்கண்ணும் இடத்தோளும் துடித்தல் தீக்குறி.

188. அயர்ச்சி - சோர்வு.

190. குழல் - கூந்தல். கொண்டல் - மேகம்.

191. ராமீசர் - இராமேசுரத்தலத்திறைவர்.

193 காவலர் வீரரெல்லாம்—நான் அந்தக்
கட்டழகி தன்னைவிட்டேன் சட்டசட்டிபோல்
தீவட்டி வெளிச்சங்கண்டேன்—அங்கொரு
செப்புக் கிடாரத்தி னுட்பதுங்கினேன்

194 அரண்மனை சோதித்தபேர்—மயக்கமுற்
றங்கனே கிடக்குமந்த மங்கையைக்கண்டார்
கருவுள்ள திருடனிவன்—என்றுவழி
கட்டிக்கொண்டு சல்லடை யிட்டுப்புடைத்தார்

195 நடுக்கம் எடுத்ததெனக்கே—காலும்கையும்
நானசையக் கொப்பரை தானசையாதோ
கிடுகிடென் றசைந்திட்டதே—அதைவிட்டுக்
கிளம்பினேன் என்புத்தி கெட்டதைக்கேளும்

196 செலதாரைக் குள்நுழைந்தேன்—மூக்குமயிர்
சிந்திப் பொசுங்கிப்போச்சு தந்நாற்றம்
நல்லதென் திருக்கையிலே—காதிலே
நாக்குப்பாம்பு நுழைந்து தாக்கிற்றையோ

197 மூளையி லேறிட்டுது—அதைவிட
முடிந்துபோ னாலும்மெத்த முக்கியங்காண்
கேளுமோர் அவதிதன்னை—இப்படிக்
கெதிகெட்ட வேளையில் இதுபற்றாமல்

198 நாய்க்கடிக் காயத்திலே—பிள்ளைப்பூச்சி
நாலாறு நுழைந்ததே ராமராமா
வாக்கிட்டுச் சொல்லப்போமோ—அதுபுகுந்து
வறட்டையி லேயொரு முரட்டுப்பயல்

---

196. செலதாரை - கழிவுநீர்செல்லும்படி மேற்புறம் மூடியமைத்த வாய்க்கால்.

197. முடிந்துபோனாலும் - செத்தாலும். அவதி - துன்பம். கெதி கெட்ட வேளையில் - போக்கற்றபொழுதில். இதுபற்றாமல் - இந்தநாக்குப் பாம்பு குடைந்த துன்பத்தின்மேலும்.

198. வறட்டையில் - துன்பப்படுத்தும் நிலையில்.

199 தண்ணீரைச் சாய்த்துவிட்டான்—மூச்சுவிடத்
தடைபட்டு நானந்தக் கிடையைவிட்டு
விண்ணூர்ந்து வெளிப்பரிந்தேன்—பரியுமுன்
விட்டதண்ணீர் அங்கேதடை பட்டதைக்கண்டு

200 குத்தினார் தடியைக்கொண்டு—அதிலொரு
குத்துவந்தென் பீசத்திற் றைத்துவிட்டது
பெற்றது மோசமன்றே—இத்தனையும்
பெருமையாய்த் தோணுமந்தப் பெண்கிடைத்தால்

201 வீண்துன்பம் படலாமோ—செலதாரை
விளிம்புபட் டுடலெங்குந் தழும்புபட
மீண்டந்தப் புறம்பரிந்தேன்—அங்கேயும்
விட்டதில்லை யென்னைத் தொட்டசனியன்

202 நீராவிக் கொல்லையது—மரங்களின்
நிழலிலும் பூஞ்செடித் தழைகளிலும்
தூரோரத் தொளித்தொளித்து—வரயிலோர்
சப்பியோடிந் ததிலொரு கொப்பசைந்தது

203 அசைகைகண் டங்குவளைந்தார்—வளையவும்
அப்படியே உயரொரு கொப்பில்தொத்தினேன்
முசுறங்கே தலைப்பட்டது—மயிர்க்கொன்றாய்
மொய்த்துக்கொண் டடிதெரிச்சல் பற்றிக்கொண்டது

---

199. இடை - இருப்பு. விண்ணூர்ந்து - தாவி. வெளிப்பரிந்தேன் - வெளியே விரைந்துவந்தேன்.

200. பீசம் - விதை. அந்தப்பெண் என்றது இவன் களவிற்கொள்ள நினைந்த சிறை.

202. நீராவிக்கொல்லை - தடாகத்தோடுகூடிய வீட்டின் கொல்லை. சப்பி - காய்ந்த சுள்ளி.

203. அசைகை - அசைதல். முசுறு - எறும்பில் ஒருவகை. தலைப் பட்டது - தோன்றிற்று.

204 குருவிகள் கலைந்திட்டது—ஏகத்திற்
கூக்குர லாச்சுதினிப் போக்கடியெங்கே
மரமெங்கும் வளைந்துகொண்டார்—அவரொரு
மரந்தேட நானொரு மரந்தாவப்

205 பறவைகள் காட்டிக்கொடுக்க—இப்படிப்
பாவோடி னேன்தப்பிப் போவோமென்றே
குறிதப்பிப் போய்விட்டது—முருங்கையின்
கொப்பைப்பிடித் தொடிந்துபோய்க் குப்புறவீழ்ந்தேன்

206 கேணித்தண் ணீருக்குள்ளே—எருமைக்
கிடாப்போல் விழுந்தாற்சத்தம் கேளாதோ
மாணுற்று வந்துவளைந்தார்—வளைந்தவர்
மத்தாப்பு வெளிச்சத்தில் உற்றுப்பார்க்கவே

207 நட்டகட்டை போலிருந்தேன்—கண்டுகொண்டு
நாக்குவளைத் ததட்டினர் கூக்குரல்வைத்தார்
பெட்டிமகன் றணிப்பாரும்—நம்முடைய
பேருமிகும் காவலும் பிளந்ததென்பார்

208 நாயல்லோ சொல்லிவிட்டது—அல்லாமல்
நாங்காண்ப தேதிவனைப் போங்காணென்பார்
ஆயிரங் கள்ளர்களை—ஒருமிக்க
அழித்துச்செய் வித்ததிவன் தொழில்காணென்பார்

209 அவகடப் பட்டுவிழ்ந்தான்—அல்லாமல்
அம்புலிமானையும் செம்புவானென்பார்
இவனுட திறம்பார்த்தால்—கேணியில்
இருக்கையிற் பிடிப்பதும் வருத்தமென்பார்

---

204. போக்கடி - போக்கு.

205. பாவோடினேன் - நெசவாளர் பாவில் குழல் சென்று திரும்புதல் போல் யானும் சென்று, சென்றவழியில் பாதுகாப்பு மிக்கிருந்தமையால் சென்றவழியே திரும்பி இப்படியே பலவழிகளிலும் திரிந்தேன்.

206. கேணி - கிணறு.

207. பெட்டிமகன் - வேசைமகன்.

209. அவகடம் - வஞ்சகம். அம்புலிமான் - சந்திரன்.

210 இவளவு காவற்குள்ளே—வந்தானே
எமனுக்கும் இவன் துணி வில்லையென்பார்
அவரவர் நினைத்தபடி—கட்டுமென்பார்
அடியுமென்பார் கைகளை ஒடியுமென்பார்

211 இடறுங்கள் தலையையென்பார்—ஐயோவென்
றிரங்குவா ரதிலொரு வருங்காணேன்
வடுகர்கள் ஓடிவந்து—எந்தமஞ்சி
வாடுரவு ஞுடுதொங்க வாடுபோடென்பார்

212 பருத்த மராட்டியர்கள்—வந்து
பளாபக் காச்சோர மாளல்லாவென்பார்
வருத்திய கன்னடியர்—ஓடிவந்து
வள்ளேகள் ஊன்சிக்கித் தல்லாவென்பார்

213 பட்டாணிச் சேவகர்கள்—ஓடிவந்து
பகடோ பகடத்தேரி பாஞ்சோத்தென்பார்
எட்டானைப் பலனுண்டென்பார்—ஆயுதங்கள்
இடுப்பிலே யிவனுக்குண் டடக்கமென்பார்

214 பெட்டிப்பாம் பென்னசெய்யும்—அதுபோலப்
பேசாதி ருப்பதிவன் பாசாங்கென்பார்
விட்டுப்பார்த் தால்தெரியும்—கொப்பத்தில்
வீழ்த்திய ஆனைக்கெங்கே ஓட்டமென்பார்

215 கொக்கரிப் பார்குதிப்பார்—என்கையால்
கொல்லவேணு மென்றுதுரை சொல்லுவாரென்பார்
வக்கணை பேசுவதும்—ஏசுவதும்
வாம்பில்லை அவர்நாக்கில் நரம்பில்லையே

216 இதுக்கெனக் கிளப்பமென்ன—உலகத்தில்
இளைத்தவன் தேவியெல் லோர்க்குமதனி
பிதற்றுவார் போவென்றுநான்—சும்மாகல்லுப்
பிள்ளையார் போலிருந்தேன் உள்ளதுண்டென்று

---

212. கொப்பம் - யானைபிடிப்பதற்காக வெட்டப்பட்ட பள்ளம்.

215. இங்கே 'துரை' என்றது சேதுவேந்தர் பெருமானை. வக்கணை-
விந்தனை.

216. இளப்பம் - ஈனம்.

217 இப்படி யிருக்கையிலே—கயிற்றைக்கொண்
டேணிவழி யிருவர் இறங்கிவந்து
கைப்பிடித் திறுகக்கட்டிக்—கரையேற்றிக்
காவற்புரைக்குள் வைத்தார் கோவத்துடன்

218 காலொடு கைகளுக்கும்—வெவ்வேறு
கட்டைகள் துளைத்ததிற் குட்டையடித்தார்
நாலுபுற மும்இருந்தார்—அவர்சிவ
ராத்திரிகொண் டாடினர் நான்றூங்கினேன்

219 மறுநாள் விடியுமுன்னே—சேதுபதி
மண்டலா திபன்முன்பு கொண்டுபோய்விட்டார்
சிறைகொள்ள வந்தகள்ளன்—என்றென்
திறமும் அவர்கள்செய்த மறமும்சொன்னர்

220 துரைமக்கள் படைத்தலைவர்—சேவகர்
சுற்றத்தார் களுமென்னை உற்றுப்பார்த்துக்
குருவிபோல் பதுங்கிநின்றாய்—என்னடா
குக்கலே யுனக்குத்தேங்காய் தக்குமோவென்பார்

221 நடுச்சபை தனிலேவந்து—அஞ்சாமல்
நமக்கென்னென் றிருக்கிறான் சமத்தனென்பார்
இடுக்கணித் தனையாலும்—முகத்திலே
எள்ளளவும் வாட்டமில்லை கவடனென்பார்

---

217. காவற்புரை - காவல்செய்வோர் தங்குமிடம்.

218. சிவராத்திரிகொண்டாடினர் என்றது, சிவராத்திரி விரதவொழுக்கம்பூண்டவர் அன்று இரவு முழுதும் கண்விழித்தல்போல அன்று இரவு முழுதும் கண்விழித்து என்னைக் காவல்புரிந்தார் என்றபடி.

220. குக்கல் - நாய். நாய்க்கு முழுத்தேங்காய் பயன்படாதவாறு போல நாயினுங்கடையனான உனக்குத் தானபதிப்பதவி பயன்படாது=நிலைபாது என்றவாறு. நாய்க்கு முழுத்தேங்காய் பயன்படாதவாறுபோல் அவனுக்கு ஆடன்மகளையடைதலும் கிட்டாதாயிற்றெனலும் ஆம்.

221. இடுக்கண் - துன்பம். கவடன் - வஞ்சகன்.

222 இமைச்சிமிட் டலைப்பாரும்—இத்தனை
எடுத்துச்செய் தவனேதுக் கிளைப்பானென்பார்
சுமக்கொணுச் சுமையெடுத்தான்—இவன்றன்னைச்
சும்மா விடப்போமோ அம்மாவென்பார்

223 தூண்டியிற் போடுமென்பார்—நீறிய
சுண்ணும்புக் காளவாயிற் சுடுவோமென்பார்
பாண்டிமண் டலத்தினிலேநீ யெங்கிருந்தாய்
பாவியென்பாரடாமூதேவியென்பார்

224 தாணு பதியென்று—வேடங்கொண்ட
சண்டாள த்ரோகியிவன் றானேயென்பார்
சேணு பதியரெல்லாம்—இதுசொல்லச்
சேதுமன் னனுஞ்சில சேதிசொல்வான்

225 பெருமைபெற் றிருந்தவரே—தாணுபதிப்
பிள்ளையவர் களேயென்ன கொள்ளையுமக்குத்
திருடவும் படித்தீரோ—என்னென்று
தேறுவீ ரோகழுவில் ஏறுவீரோ

226 மலைகாட் டரசனுக்கு—வேணுமென்று
வாய்த்திரே இதைவிடக் கீர்த்தியுண்டோ
கொலைகாம் செய்வதில்லை—இவன்றன்னைக்
கொண்டுபோய் விடுங்களவ ரண்டையிலென்றான்

227 என்றலும் பிடித்தார்கள்—சேவகர்
இருபது பேர்கத்தி உருவிவரச்
சென்றக்கு கொணர்ந்துவிட்டார்—கோளர
தேசத் தரசன்எனனை யேசிச்சொல்வான்

228 சுடுந்தொழில் செய்தாயடா—எண்டாசண்டித்
தொழுவாடி கள்ளக் கழுவேறி
மடந்தையர் உனக்கில்லையோ—இப்படி
மட்டித்தொழில் செய்தவுன்னை வெட்டினுலென்ன

229 விருந்திட்டுப் பகையழைத்தாய்—சாமித்ரோகம்
விடுமோ வுடனேகாட் டிடுமல்லவோ
வரம்பற்ற கொடுமைசெய்த—இந்தத்துன்
மார்க்கனை யப்புறத்தே யகற்றுமென்றான்

230 நாய்க்குண்டோ நல்லபதம்—ஆங்கிருந்து
ஞானியார் முன்புகொண்டு போனார்களே
தாய்க்காகா தார்க்காவான்—ஞானியார்
சந்தோஷப் படுவாரோ வென்தோஷத்தை

231 உடலெங்கும் நடுங்கிச்சொல்வார்—நமக்கிங்கே
உள்ளமுற் றிருந்தாயே கள்ளப்பயலே
கிடையாத பொருள்களெல்லாம்—உனக்கெம்மைக்
கேட்டால் நாம்கொடுக்க மாட்டோமோ

232 தலையில் எழுத்திருந்தால்—உனைச்சும்மா
தரிக்கொட்டு மோஇந்தத் திருக்கிட்டது
கொலைசெய்யொண் ணாதிவனைக்—காலுங்கையும்
குறைத்தொரு கால்கையொடே துறத்துமென்றார்

233 அரசனும் அதுகேட்டு—இதுக்கெல்லாம்
யாத்திரை வந்தோம் பாத்தியமோ
துருவனும் சேதுமன்னன்—இடத்திலிந்தத்
துட்டப்பய லைக்கொண்டுபோய் விட்டிடுமென்றார்

234 அங்கிருந் திங்குகொணர்ந்தார்—யோகியர்சொல்
ஆக்கினையும் அரசன்சொல் வாக்கியமும்
இங்கித முந்தெரிந்து—மன்னுயிர்க்
கிதமா கியசேது பதிராசன்

---

230. ஞானியார் - ஈச்சுரயோகி.

232. தரிக்க - ஒட்டுமோ என்க. தரிக்க - தங்க. திருக்கு - தீவினை. கொலைசெய்ய வொண்ணாது என்க.

234. யோகியர் - ஈச்சுரயோகி. அரசன் - அநந்தபத்மநாபதாசன் என்ற மலையாளநாட்டரசன். இங்கிதம் - குறிப்பு.

235 தலையாரி களையழைத்துக்—காலுங்கையும்
தட்டிவிடு மென்றுகத்தி தொட்டுக்கொடுத்தான்
சொல்வதைக் கேட்டுடனே—சாமிநான்
துன்பப்பட மாட்டேனென்று கும்பிட்டுவிழுந்தேன்

236 கண்ணிரண்டும் அவிந்தபின்பு—சூர்யநமஸ்
காரமென் னடாவென்றார் காரியஸ்தர்
பண்ணுமனை கடந்தவெள்ளம்—திரும்புமோ
பதிசொன்ன திருவாக்குக் கெதிர்வாக்குண்டோ

237 அப்புறங் கொணர்ந்துவிட்டார்—விட்டுக்குரங்
காட்டமாட்டி னார்தெருக் கூட்டங்கூட்டினர்
எப்படிச் செய்தாலும்—எனக்கங்கே
ஏனென்று கேட்பவர் எவருமுண்டோ

238 கொண்டையைக் குலைத்துவிட்டார்—மாப்பிள்ளைக்
கோலமென் றெருக்கம்பூ மாலையிட்டார்
பெண்டுகொள் திருட்டுப்பயல்—இவனென்று
பேரிகை யடித்தனர் ஊரெங்குமே

239 பாளையம் புறப்பட்டாற்போல்—என்றனைப்
பார்க்கப்புறப் பட்டார்கள் ஊர்க்குளுள்ளோர்
ஆளுடன் ஆள்தள்ளி—ஒன்றுக்கொன்று
அடிச்சடி பட்டதந்தக் கடைத்தெருவில்

240 என்னுடைய ராசாங்கம்—யானையில்
ஏறியும் திட்டிவாச லேயென்றுநான்
உன்னிய மகிழ்ச்சிகொண்டு—நமக்கிது
ஒருநா ளானாலும் திருநாளென்று

---

236. பதி என்றது சேதுவேந்தரை.

240. சேதுவேந்தருக்குத் தானுபதியாயும் அதற்கேற்ற சீரியசெயல் செய்யாது திருட்டுத்தொழிலிற்றலைப்பட்டு இழிந்த சோரசூரன் செயலுக்கு, யானையேறிய ஒருவன் அதற்குத்தக ராஜவீதியிற்பவனிசெல்லாது திட்டிவாசலை யெதிர்ப்பட்டு யானையினின்றிரங்கிய செயலை உவமைகூறினர். 'யானையேறியும் திட்டிவாசல்' என்பது ஒருபழமொழி.

241 மெய்யிற மாப்புடனே—தோளிலே
வேட்டியை வல்லவட்டுப் போட்டுக்கொண்டு
கைகளை வீசிக்கொண்டு—என்னிடத்திற்
காத்திருந் தவரெல்லாம் பார்த்திருக்கச்

242 சட்டமாய்ப் பவனிவந்தேன்—தெருவெல்லாந்
தாண்டிவந் தாக்கினைத் தலத்தில்வைத்து
வெட்டினார் காலுங்கையும்—இருதுண்டாய்
விழுந்ததென் கண்கலங்கிச் சுழன்றிடவே

243 துடித்துத் துடித்துநொந்து—ரத்தவெள்ளம்
தோய விழுந்தேன்மூர்ச்சை போய்விட்டது
கிடைக்குள்ளே கிடந்துழன்று—ஈமொய்க்கக்
கிருமிகள் மொய்த்தரிக்க எறும்பரிக்கத்

244 துர்க்கந்தத் திலேமூழ்கி—நான்கிடந்து
துள்ளின மாடுபொதி சுமக்கையிலே
சக்கந்தம் பண்ணவருவார்—பெண்ணாசை
சார்ந்ததுகை காலொடு தீர்ந்ததென்பார்.

245 காறுதென் றொதுங்கிநிற்பார்—அடேகள்ள
நாயேமுழங் காலிலென்ன காயமென்பார்
தேறுதல் சொல்லவருவார்—இப்படித்
தேர்க்கூட்டங் கூடிநற்றந்த மார்க்கத்திலே

246 பங்கமுற் றிருக்கையிலே—நான்தானு
பதியாகி முன்னிருந்த துதிகேட்டு
எங்களூ ரினிலிருந்து—கும்பிட
எதிர்வந்த தெய்வம்போல் எனைத்தேடி

---

242. ஆக்கினைத்தலம் - குற்றவாளிகளைத் தண்டிக்கும் இடம்.

243. கிருமி - புழு.

244. துர்க்கந்தம் - கெட்டநாற்றம். சக்கந்தம் - பரிகாசம்.

245. மார்க்கம் - வழி.

246. பங்கம் - அவமானம்.

247 மைத்துனன் பார்க்கவந்தான்—நான்கிடந்த
வரிசைகண் டான்கண்ணீர் சொரியநின்றான்
இத்தனை பாடும்பட—என்தலையில்
எழுதியிருந்ததடா அழுதென்னடா

248 நாலுபேர் கண்கள்முன்னே—காகம்அன்ன
நடைகற்கத் தன்னுடைய நடையுங்கெட்டுக்
காலொடு கால்பின்னிக்—கிடக்கிற
காட்சிகண் டாயோஎன்று கட்டிக்கொண்டேன்

249 கதறினன் அவனுமங்கே—கண்ணீரால்
கழுவினான் என்னுடலை யழுதழுது
இதுகாண் பதற்கோவந்தேன்—என்றுமருந்
திட்டுக்கை காற்காயங்கள் கட்டிவிட்டுப்

250 பத்தியம் ஊட்டிவிட்டு—என்னைக்காப்
பாற்றிவிட் டானொரு ராத்திரியில்
மெத்தவும் உபசரித்தான்—நம்முடைய
மெய்யழகர் தருவார் காலுங்கையும்

251 ஊரொடும் போவோமென்றான்—எனக்கந்த
ஓசையுற் றதுநா ராசம்போலே
பாரெங்கும் எனக்கூர்தான்—நானினிப்
பரதேசி யாகியே திரிவேனென்றேன்

252 வேஷமிப் படியாச்சே—அங்கே பூ
விற்ற கடையிற்புல்லு விற்கமாட்டேன்
தாசரி போல் திரிந்து—புல்லாணித்
தலத்திலே என்காலம் தொலைப்பேனென்று

253 தாவந்த மில்லாமற்—செய்திகள்
தனித்துச்சொல் லியவனை யனுப்பிவிட்டேன்
கோவிந்தன் பேரைச்சொல்லிக்—கைக்கொரு
கோலுமோர் பொந்தையும் காலுக்குக்கட்டிக்

---

250. மெத்தவும் - மிகவும். இங்கே மெய்யழகர் என்றது, திருமாலிருஞ்சோலைமலையழகரை.

251. நாராசம் - பழுக்கக்காய்ச்சிய இரும்புச்சலாகை.

252. தாசரி - தாதன்.

254 காவிவஸ் திரமுடுத்தி—வீசையும்
கட்டிய கொண்டையும் மொட்டையடித்துப்
பாவமெல் லாந்தொலைந்து—தருமங்கள்
பலித்திடும் புல்லாணித் தலத்தில்வந்து

255 நொண்டிக்கோ விந்தனென்ற—பேர்கொண்டு
பிச்சை யெடுத்தவ்வூ ரெங்குந்திரிந்தேன்
கண்டினும் இனிய சொல்லரன்—செந்தமிழ்க்
கவிவாணன் வீரரா கவசாமி

256 என்னைக்கண் டுளமிரங்கி—மாயன்கா
வீயும்படி யெனக்கொ ருபாயஞ்சொன்னன்
சொன்னதை யுறுதிகொண்டு—பாவங்கள்
தொலையப்புண் ணியதீர்த்தந் தொறுமூழ்கி

257 ஆரியன் பெரியநம்பி—கருணைபெற்
றாழிசங் கமுமென்றன் றோளிலேபெற்று
பேருமந் திரமும் பெற்று—ஈரா று
பெற்றதிரு மண்குறியும் பெற்றுத்தெருவைச்

258 சூழ்ந்து வலஞ்செய்வதும்—எம்பிரான்
தொண்டரைப் பெரியோரைக் கண்டவிடத்தில்
தாழ்ந்து வணங்குவதும்—உச்சிட்டம்
தள்ளும் இலையமுதைக் கொள்ளுவதும்

259 பெருந்திரு வீதியிலே—உருண்டங்கப்
பிரதட்ச ணம்செய்வ தும்விரதமாய்ப்
பொருந்துக்க மேசுகமாய்—ஒருகால்
பொங்கை மரத்தொடுங் குந்தித்திரிந்தேன்

---

255. இங்கு வீரராகவசாமியென்றது, இந்நொண்டிநாடகத்தைஇயற்றித் தந்த ஆசிரியரை.

257. ஆழி - சக்கரம். பேர் - தாஸ்யநாமம். மந்திரம் - அஷ்டாக்ஷரம்.

258. உச்சிட்டம் - எச்சில்.

260 சிலநாட் போனபின்பு—மார்கழித்
திருவத் தியயனத் திருநாளிலே
கலியனுக் கருள்புரிந்து—சாத்துமுறை
கண்டருள் சமயத்திற் கொண்டல்வண்ணன்

261 பரிந்தனன் என்னிடத்தும்—பாவிக்கும்
பாவி யானவென்னைக் கூவவென்றான்
தெரிந்தனர் ஓடிவந்தார்—வேத்திரச்
செல்வர்வந் தழைக்கநான் புல்லரும்பிச்

262 சென்னியிற் கைகுவித்து—உள்ளமும்
தேகமும் பதறினான் த்ரோகியன்றோ
சன்னிதி முன்புவர—அவ்வளவு
சிலாக்கிய னோபார்க்க யோக்கியனோ

263 நாயினும் கடையனன்றோ—யாதொரு
நலமுமில் லாதவனைக் குலவீனனைத்
தீயவர் சேகரனை—மங்கையா
தீனனை யதோகதி யானவனைக்

264 காதலித் தழைத்தானே—என்றுருகிக்
கண்களில் நீர்சொரிய அங்குசென்றேன்
பாதகஞ் செய்ததெல்லாம்—இரவிமுன்
பனியெனப் பறந்திடப் பணிந்து நின்றேன்

---

260. கொண்டல்வண்ணன் - இங்கே திருப்புல்லாணித் தெய்வச் சிலைப் பெருமான்.

261. பரிந்தனன் - அன்புசெய்தான். வேத்திரச்செல்வர் - கோயிற் சீகாரியஞ்செய்பவர்.

263. குலவீனன் - இழிகுலத்தினன். தீயவர்சேகரன் - தீயவர் தலைவன். மங்கையர் அதீனன் - பெண்கள்வசப்படுபவன்.

264. இரவி - சூரியன்.

265 உரிமைகொண் டெனக்கருள்வான்—அங்குதிரு
வோலக்கம் வீற்றிருந்த கோலத்தைக்கண்டேன்
திரைகொண்ட பெருக்கெனவே—அயன்முதல்
தேவர்கள் முனிவர்கள் திசைமகிபர்

266 அகிராசன் பட்சிராசன்—சேனையர்கோன்
ஆழ்வார்கள் ஆரியர்கள் அடியவர்கள்
தகவுகொள் பரிவாரர்—நம்பியர்
தக்க பரிசனர்கள் சமயத்தரும்

267 கரதலம் குவித்திறைஞ்சி—இருபாலும்
கட்டியம் முழங்கிடச் சிட்டர்புகழ
விருதுகள் பிடித்துநிற்க—கவரிகள்
வீச மறைத்தமிழ் கோஷமிட

268 நரம்பொலி யாழ்முழங்க—வாத்திய
நாதம் முழங்கச்சங் கீதம்முழங்க
அரம்பையர் நடனஞ்செய்ய—யாவரும்
ஆநந்த வெள்ளத்தில் ஆழ்ந்துநிற்கத்

---

265. திரைகொண்டபெருக்கு - அலையுடையவெள்ளம். அயன் - பிரமன். திசைமகிபர் - திக்குப்பாலகர்.

266. அகிராசன்-பாம்புகளுக்கு அரசன்=ஆதிசேடன். பக்ஷிராசன்-பறவையரசன்=கருடன். சேனையர்கோன் - சேனைமுதலி=விஷ்வக்சேனர். பரிவாரர் - சுற்றத்தார். நம்பியர் - அருச்சகர். பரிசனர் - அடியார்.

267. கரதலம் - கை. இறைஞ்சி - வணங்கி. இருபாலும் - இரண்டு பக்கமும். கட்டியம் - விருது. சிட்டர் - பெரியோர். கவரி - சாமரை. மறைத்தமிழ் என்றது, ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களான திவ்யப்ரபந்தங்களை. கோஷமிட - முழங்க.

268. வாத்தியநாதம்என்றது, துளைக்கருவியால் எழுப்பும் இசையினை. சங்கீதம் என்றது வாய்ப்பாட்டை,

269 திரைகளும் மேற்கட்டியும்—நவமணிச்
சீர்மாலை யும்பல பூமாலையும்
குருமணி யொளிமயமாய்—வளமெலாம்
கொண்டதொரு காங்கேயன் மண்டபத்தினில்

270 சுந்தரபாண் டியன்குறட்டில்—பொன்னின்வளம்
தோயும்ஒரு குருகுல ராயன்பீடத்தில்
எந்தைதெய்வச் சிலைப்பெருமாள்—மின்னெனும்
இருதேவி மாருடன் கருமேகம்போல்

271 வளருமெய் யழகொழுகத்—தொண்டர்கள்
வாழ்த்த எழுந்தருளி வீற்றிருந்து
நளின மலர்ப்பதத்தைத்—திருமங்கை
நாதனுக் கருளினன் காதலுடன்

272 திருமங்கை மன்னன் எழுந்து—வாய்புதைத்துச்
செங்கை குவித்துக்குழைந் தங்கம்ஒடுக்கிக்
கருமுகில் வண்ணனடிக்கீழ்—மறைபுக்குக்
கைதொழு தெழுந்திப்பால் எய்திநின்றான்

273 நின்றபின் அடியேனும்—எம்பிரான்
சீர்மைகண் டிதுநல்ல நேரமென்றே
சென்றெதிர் கைதொழுதேன்—புல்லாணித்
தெய்வச் சிலைமுகிலைக் கைதொழுதேன்

274 ஆவினம் உடையானைப்—பச்சையால்
அடையானை யாழிப் படையானைத்
தேவர்க்கும் கிடையானைப்—புல்லாணித்
தெய்வச் சிலைமுகிலைக் கைதொழுதேன்

---

269. குருமணி - நிறமுள்ள இரத்தினம்.

270. திருப்புல்லாணி யெம்பெருமான் மார்கழியின் அத்யயன விழாவில் திருமங்கையாழ்வார்க்கு வீடருளிய நிகழ்ச்சி- காங்கேயன்மண்டபத்திலுள்ள சுந்தரபாண்டியன்குறட்டில் பொன்னால் அலங்கரிக்கப்பட்ட குருகுலராயன் பீடத்தில் நிகழ்வதென்று இக்கண்ணியால் விளங்குகின்றது.

271. நளினமலர் - தாமரைப்பூ.

274. ஆவினம் - பசுக்கூட்டம். ஆல்அடை - ஆலிலை. ஆழிப்படை- சக்கராயுதம்.

275 கருடப்பொற் கொடியானை—முல்லைமலர்க்
கடியா னைமணி முடியானைத்
திருவர சடியானைப்—புல்லாணித்
தெய்வச் சிலைமுகிலைக் கைதொழுதேன்

276 அருள்சொரி விழியானை—வழிக்கும்
அழியானைப் பொன்னங் கழியானைத்
திருவணை வழியானைப் புல்லாணித்
தெய்வச் சிலைமுகிலைக் கைதொழுதேன்

277 அன்புள்ள மனத்தானைத்—தர்ப்பா
தனத்தானைக் கோவர்த் தனத்தானைத்
தென்புல்லை வனத்தானைப்—புல்லாணித்
தெய்வச் சிலைமுகிலைக் கைதொழுதேன்

278 கைதொழு துள்ளம்உருகி—மெய்பதறக்
கண்ணீரா றுய்ப்பெருக மண்ணில்வீழ்ந்து
செய்பிழை பொறுப்பாயென்று—புலனையும்
சித்தத்தையும் அவன்பா தத்திற்செலுத்திச்

279 சன்னிதி முன்பாக—அடியற்றுச்
சாய்ந்தபனை மரம்போல் வீழ்ந்துகிடந்தேன்
தன்னறி வில்லாமல்—கிடக்கின்ற
தருணத்தி லேயந்தக் கருணைக்கடல்

---

275. முல்லைமலர்க்கடி - முல்லைமாலையின் பரிமளம்.

276. பொன்னங்கழி - திருப்புல்லாணியையடுத்த உப்பங்கழி.

277. தர்ப்பாதனத்தான் - தருப்பைப்புல்லை ஆசனமாகக்கொண்டவன். கோவர்த்தனத்தான் - கோவர்த்தனமலையையெடுத்தவன். தென் - அழகிய. புல்லைவனம் - புல்லங்காடு=புல்லாரணியம்.

278. புலன் என்றது பொறிகளையும் விடயங்களையும். சித்தம்-மனம்.

279. சன்னிதி - கோயில். தருணம் - சமயம். அந்தக்கருணைக்கடல் என்றது தெய்வச்சிலைப்பெருமானை.

280 கடைக்கண்ணூற் பார்த்திரங்கி—காட்டில் அந்தக்
காகா சுரனைப்பண்டு காத்ததுபோல்
தடக்கை யபயங்காட்டிக்—காலுங்கையும்
சந்தோஷ மாகும்படி தந்தோமென்று

281 செழித்தசொப் பனத்தாலே—என்னையடா
திருடா இனியெழுந் திருடாவென்றான்
எழுப்பினாற் போலெழுந்தேன்—காலுங்கையும்
எப்போதும் போலேவளர்ந் திருக்கக்கண்டேன்

282 துள்ளினேன் துள்ளித்துள்ளி—எம்பிரான்
சுந்தரத்தி லேமனதைச் சூறைவிடுத்தேன்
கள்ளம் எலாந்தவிர்ந்தேன்—எம்பிரான்
கைங்கரி யத்தைத்தானே காதலித்தேன்

283 அப்பொழு தெம்பெருமான்—தோளிலே
யணிதிரு மாலையைத் தணியவிட்டான்
ஒப்பினான் என்றறிந்து—தொண்டர்திரு
வோலக்கம் எழுந்து மாலையுடன்

284 உடுத்துக் களைந்ததெல்லாம்—கொடுத்தன்ப
ருடன்வைத் தெனக்கோர்பணி விடையுஞ்சொன்னான்
விடைகொண்ட நாண்முதலாய்—மலர்ப்பூ
மேலிருந் தவள்பொற் றாள்வணங்கிக்

---

280. சீதாபிராட்டியினிடம் தவறிழைத்து வேறு உய்யும்வழியின்றி யலுத்து இராமபிரானால் உய்திபெற்ற காகாசுரன் வரலாறு இராமாயணத் தால் அறியத்தக்கது. தடக்கை - பெரியகை. அபயம் காட்டி - அஞ்ச லென்று காட்டி.

282. சுந்தரம் - அழகு. சூறை விடுத்தேன்-பறிகொடுத்தேன். கைங் கரியம் - தொண்டு.

283. ஒப்பினான் - இசைந்தான்.

284. உடுத்துக்களைந்தது - அணிந்து நீக்கினஆடை. இது சூடிக் களைந்தமாலை முதலியவற்றுக்கும் உபலக்ஷணம். பணிவிடை செல்லஅநுமதி. பூமேலிருந்தவள் என்றது பதுமாசனித்தாயாரை.

285 கோதையைத் தொழுதிறைஞ்சி—புல்லிற்பள்ளி
கொண்டவனை யிலங்கை வென்றவனைப்
பாத மலர்வணங்கி—ப்ராக்ருதியின்
பாசமிறந் தன்பரொடு நேசம்பிறந்து

286 கருமமெல் லாந்தொலைந்து—எம்பிரான்
கஞ்ச மலரடியே தஞ்சமென்று
மருவளர் புல்லாணித்—தலத்திலே
வாழ்ந்திருப் பாருடன் வாழ்ந்திருந்தேன்.

தந்தானத் தானனை.

விருத்தம்.

ஏ வாழிதிருப் புல்லைத்தெய் வச்சிலையார்
செகநாத மாயன் வாழி
வாழிபது மாசனிசூ டிக்கொடுத்தாள்
சீதைமண வாளன் வாழி
வாழிதொண்டர் அண்டர்களும் பதின்மர்களும்
செய்யதிரு வரசும் வாழி
வாழிநொண்டி நாடகத்தைப் படிப்பவர்கள்
கேட்பவர்கள் வாழி வாழி.

முற்றிற்று.

---

285. கோதை - ஆண்டாள். புல்லிற்பள்ளிகொண்டவன் - தருப்பசயனத் தெம்பெருமான். ப்ராக்ருதியின் பாசம் இறந்து - உலகப்பொருளிற் பற்றற்று.

286. கருமம் - நல்வினை தீவினைகள். கஞ்சமலர் - தாமரை மலர்.